




# தினபூமி

thinaboomi.com











**இன்று பாராளுமன்ற தேர்தல்: ஓட்டு போடுவதற்காக ஜப்பானில் இருந்து சேலம் வந்த வாக்காளர்**

...2-ம் பக்கம்

**ஜாமீனுக்காக வேண்டுமென்றே இனிப்பு சாப்பிடுகிறார் கெஜ்ரிவால்: அமலாக்கத் துறை குற்றச்சாட்டு**

...3-ம் பக்கம்

**இம்பேக்ட் விதிமுறையால் முக்கியத்துவத்தை இழக்கும் ஆல் ரவுண்டர்கள்: ரோகித்**

...7-ம் பக்கம்





பாராளுமன்ற தேர்தல் இன்று நடைபெறுவதையொட்டி நத்தம் அருகே கரந்தமலை மலை அடிவாரத்திலிருந்து சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ள பெரிய மலையூர், சின்னமலையூர் மற்றும் வலசு ஆகிய மலை கிராமங்களுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் மின்னணு வாக்கு இயந்திரங்கள் குதிரைகள் மூலம் கொண்டு செல்லப்பட்டது

### பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு புதுச்சேரி மற்றும்

# தமிழ்நாட்டில் இன்று ஒரேகட்ட ஓட்டுப்பதிவு

### விளவங்கோடு சட்டசபை தொகுதிக்கும் இடைத்தேர்தல்

சென்னை, ஏப். 19-

பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டில் **39** தொகுதிகளுக்கும் இன்று ஒரேகட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது. விளவங்கோடு சட்டசபை தொகுதிக்கும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

**40 தொகுதிகளில்....**

இந்தியாவின் மிகப்பெரிய ஜனநாயக தேர்தல் நாடு முழுவதும் நாளை தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. 7 கட்டங்களாக பாராளுமன்ற மக்களவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முதல் கட்டமாக தமிழ்நாட்டில் 39 தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் ஒரு தொகுதி என மொத்தம் 40 தொகுதிகளுக்கு இன்று (ஏப். 19) ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

**950 வேட்பாளர்கள்...**

தமிழ்நாட்டில் உள்ள 39 மக்களவை தொகுதிகளில் 1085 வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்ட நிலையில் 135 மனுக்கள் திரும்ப பெறப்பட்டன. மொத்தமாக 874 ஆண்களும் 76 பெண்களும் என மொத்தம் 950 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் திமுக கூட்டணி, அதிமுக கூட்டணி, பாஜக கூட்டணி மற்றும் நாம் தமிழர் கட்சி என 4 முனை போட்டி நிலவுகிறது.

**பிரசாரம் ஓய்ந்தது...**

இதனையடுத்து வாக்குப்பதிவிற்கான இறுதி கட்ட பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது. இன்று தமிழ்நாட்டு மற்றும் புதுச்சேரியில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில், கடந்த 2 வாரங்களுக்கு மேலாக அனல் பறக்க நடந்துவந்த பிரசாரம் நேற்று முன்தினம் இன்று மாலை 6 மணியுடன் முடிவடைந்தது.

**21 மாநிலங்களில்...**

இன்று நடைபெறும் முதல் கட்டத் தேர்தலில் 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதில் 10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முழுமையாகவும், 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் பகுதியளவும் தேர்தல் நடைபெறவுள்ளது.

அந்தமான் நிக்கோபார் தீவுகள் (1): அந்தமான் நிக்கோபார் தீவுகள், அருணாச்சலப் பிரதேசம் (2): அருணாச்சலப் பிரதேசம் கிழக்கு, அருணாச்சலப் பிரதேசம் மேற்கு, அசாம் (5): திப்ருகர், ஜோர்ஹாட், காசிரங்கா, லக்கிம்பூர், சோனித்பூர், பீகார் (4): அவுரங்காபாத், கயா,

(கடைசி பக்கம் பார்க்க)

# தமிழகத்தில் வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்

### தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு பேட்டி

சென்னை, ஏப். 19-

தமிழ்நாட்டில் இன்று நடைபெறும் வாக்குப்பதிவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் என தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 பாராளுமன்ற தொகுதிகளுக்கும் இன்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும் மொத்தம் 950 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். நேற்று முன்தினத்துடன் பிரசாரம் முடிவடைந்த நிலையில் இன்று வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

இந்த தேர்தல் ஏற்பாடுகள் குறித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தமிழகத்தில் மொத்தம் 68 ஆயிரத்து 321 வாக்குச்சாவடிக்கும் (நேற்று) வாக்குப்பதிவு மின்னணு எந்திரங்கள் (இ.வி.எம்) அடையாள மை உள்ளிட்டவை கொண்டு செல்லப்படுகின்றன.

அதேபோல் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் உரிய போலீசாரும், துணை ராணுவ படையினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்த வாக்குச்சாவடிகளில் மிக பதற்றமான வாக்குச்சாவடிகள் உள்பட 44 ஆயிரத்து 800 வாக்குச்சாவடிகளில் வெப் கேமரா பொருத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் இங்கு நடைபெறும் வாக்குப்பதிவுகளை சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள மாநில கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்கப்படும். வாக்குப்பதிவு எந்திரங்களில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் அதை சரி செய்வதற்காக 10 வாக்குச்சாவடிக்கு ஒரு மண்டல குழு என்ற வீதத்தில் 6 ஆயிரத்து 137 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த குழுவினர் உடனடியாக சென்று பழுது பார்த்து கொடுப்பார்கள். பழுது பார்க்க முடியாத எந்திரங்களாக இருந்தால் புதிய எந்திரங்கள் பயன்படுத்தப்படும். வாக்குப்பதிவின் போது விவிபேட் எந்திரத்தில் தவறான ஓட்டு காண்பிக்கப்படுவதாக இருந்தால், அந்த வாக்குச்சாவடியின் தலைமை அதிகாரியிடம் யார் வேண்டுமானாலும் முறையிடலாம். புகாரில் உண்மை இருந்தால் அந்த எந்திரம் மாற்றப்படும். புகார் தவறாக இருந்தால் புகார் அளித்தவர் மீது வழக்குப்பதிவு செய்யப்படும்.

தனது ஓட்டை யாராவது கள்ள ஓட்டு போட்டு விட்டால் அதுபற்றியும் தலைமை அதிகாரியிடம் முறையிடலாம். அவரிடம் ஓட்டளிப்பதற்கான படிவத்தை பூர்த்தி செய்து கொடுத்த பின்னர் வாக்குச்சீட்டில் டெண்டர் ஓட்டு போடலாம். அந்த சீட்டை கவரில் போட்டு தனியாக வைப்பார்கள். ஓட்டு எண்ணிக்கையின் போது வெற்றி தோல்விக்கு ஓரிரு வாக்கு வித்தியாசம் வந்தால் இந்த டெண்டர் ஓட்டு

(கடைசி பக்கம் பார்க்க)

### வாக்காளர் அடையாள அட்டை தவிர்த்து

# வாக்களிக்கத் தகுதியான 12 ஆவணங்கள் எவை எவை?

சென்னை, ஏப். 19-

வாக்காளர் அடையாள அட்டை தவிர்த்து வாக்களிக்கத் தகுதியான **12** ஆவணங்கள் எவை எவை? என்பது குறித்து தேர்தல் ஆணையம் விளக்கமளித்துள்ளது.

பாராளுமன்ற மக்களவை தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெற உள்ளது. இதில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகள் உட்பட, நாட்டில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 102 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. வாக்காளர்கள் வாக்களிக்க வாக்காளர் அடையாள அட்டை (வோட்டர் ஐடி) பிரதான ஆவணமாக கருதப்படுகிறது. வாக்களிக்க, தேர்தல் ஆணையம் வழங்கிய வாக்காளர் அடையாள அட்டை அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தை காட்டினால் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

அதேவேளையில், இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய வாக்காளர் அடையாள அட்டை இல்லாமலும் தேர்தலில் நீங்கள் வாக்களிக்கலாம். அதிகாரப்பூர்வ வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கும் வரை நீங்கள் வாக்களிக்கலாம். வாக்களிப்பதற்கு முன், இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை சரி பார்க்க வேண்டும். வாக்காளர் அடையாள அட்டை இல்லாத பட்சத்தில், தேர்தல் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாற்று ஆவணங்களை வாக்காளர் பயன்படுத்தலாம்.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருந்தால், அடையாளத்தை உறுதி செய்ய வோட்டர் ஐடி மற்றும் அதற்கு மாற்றாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை நீங்கள் பயன்படுத்தலாம். ஆதார் அட்டை, MNREGA வேலை அட்டை (100 நாள் வேலை திட்டத்திற்கான அடையாள அட்டை), வங்கி/அஞ்சல் அலுவலகத்தால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பாஸ் புக்குகள், தொழிலாளர் அமைச்சகத்தின் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சுகாதார காப்பீட்டு ஸ்மார்ட் கார்டு, ஓட்டுநர் உரிமம், பான் கார்டு, NPR இன் கீழ் RGI வழங்கிய ஸ்மார்ட் கார்டு, இந்திய பாஸ்போர்ட், புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய/மாநில அரசு/பொதுத்துறை நிறுவனங்கள்/பப்ளிக் லிமிடெட் நிறுவனங்களால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் புகைப்படத்துடன் கூடிய சேவை அடையாள அட்டைகள், எம்.பி.க்கள்/எம்எல்ஏக்கள்/எம்எல்சிகளுக்கு வழங்கப்படும் அதிகாரப்பூர்வ அடையாள அட்டைகள், தனிப்பட்ட ஊனமுற்றோர் அடையாள அட்டை (UDID) அட்டை, இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அடையாள அட்டை.

### கள்ளழகர் மீது தண்ணீர் பீய்ச்ச கட்டுப்பாடு:

# மதுரை கலெக்டரின் உத்தரவுக்கு தடை விதித்தது ஐகோர்ட் கிளை

மதுரை, ஏப் 19-

கள்ளழகரின் மீது தண்ணீர் பீய்ச்ச முறையாக பதிவு செய்து முன் அனுமதி பெற வேண்டும் என்ற மதுரை கலெக்டரின் உத்தரவுக்கு ஐகோர்ட் கிளை தடை விதித்துள்ளது.

மதுரையை சேர்ந்த ரஞ்சித் குமார், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், மதுரை சித்திரை திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. அதிலும் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவம் மிகவும் சிறப்பானது. அழகர் ஆற்றில் இறங்கும் போது அவர் மீது தண்ணீர் பீய்ச்சுவதை நேர்த்திக்கடனாக வைத்து பக்தர்கள் செய்வது வழக்கம்.

இந்நிலையில் இந்த ஆண்டு கள்ளழகரின் மீது தண்ணீர் பீய்ச்ச முறையாக பதிவு செய்து முன் அனுமதி பெற வேண்டும். பாரம்பரிய முறையில் மட்டுமே தண்ணீர் பீய்ச்ச வேண்டும் என தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன்படி கள்ளழகர் கோவிலின் இணை ஆணையரால் அனுமதிக்கப்பட்டவர்கள் மட்டுமே எதிர்சேவை நிகழ்வின் போது கள்ளழகரின் மீது தண்ணீரை பீய்ச்ச இயலும். இதனால் என் போன்றோர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

இது தனிநபரின் வழிபடும் உரிமைக்கு எதிரானது. ஆகவே முறையாக முன் அனுமதி பெற்றவர்கள் மட்டும், பாரம்பரிய முறையில் கள்ளழகரின் மீது தண்ணீர் பீய்ச்ச வேண்டும் என்ற தனி நீதிபதியின் உத்தரவின் அடிப்படையில் மாவட்ட கலெக்டர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சுரேஷ்குமார், அருள்முருகன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், கள்ளழகரின் சிலை, ஆபரணங்கள், குருக்கள் மீது தண்ணீரை அதிக அழுத்தத்தில் பீய்ச்சுவதை தடுக்க வேண்டும். ஆனால் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்துவதை எவ்வாறு தடுப்பது? என கேள்வி எழுப்பினர்.

அதற்கு அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் அட்வகேட் ஜெனரல் வீரா கதிரவன் ஆஜராகி, தோல் பைகளில் தண்ணீர் நிரப்பி, இடுப்பில் கட்டிக் கொண்டு அழுத்தம் கொடுத்தே தண்ணீர் பீய்ச்சுவர். கோடை காலத்தில் தண்ணீர் பீய்ச்சுவது அனைவருக்கும் இதமாகவே அமையும். கள்ளழகரின் ஆசி பெரும் வகையிலேயே தண்ணீர் அனைவரின் மீதும் பீய்ச்சப்படுகிறது. இதன் காரணமாகவே, தண்ணீர் பீய்ச்சுபவர்கள் பெரும்பாலும் அழகர் வேடமணிந்திருப்பர். மாவட்ட கலெக்டர் உத்தரவால் பக்தர்கள் மிகுந்த மன வருத்தத்திற்கு உள்ளாகி உள்ளனர் எனவே தண்ணீர் பீச்சி அடிக்கும் கட்டுப்பாடுகளை விலக்கிக் கொள்ள வேண்டும் என வாதிட்டார்.

இதைத் தொடர்ந்து நீதிபதிகள், கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவத்தின் போது, பிற மாவட்டங்கள் மட்டுமன்றி பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் வந்து கலந்து கொள்வர். கோடை காலத்தில் வெப்பத்தை குறைக்கும் விதமாகவே தண்ணீர் பீய்ச்சப்படுகிறது. இந்த வழக்கம் வேறு பல கோவில்களிலும் நடைமுறையில் உள்ளது. இதனால் பலர் நேர்த்திக்கடன் வைத்து தண்ணீர் பீய்ச்சுவர். மாவட்ட கலெக்டரின் இந்த உத்தரவால், தற்போது வரை 7 பேர் மட்டுமே தண்ணீர் பீய்ச்ச அனுமதி பெற்றுள்ளனர்.

இது பாரம்பரிய நடைமுறையை பாதிப்பதோடு, பக்தர்களின் மனதையும் புண்படுத்தும் என கருதுவதால் மாவட்ட கலெக்டர் உத்தரவுக்கு தடை விதிக்கப்படுகிறது. மேலும் எதனடிப்படையில் நபர்களை தேர்வு செய்கிறார்கள்? என்பது குறித்து கள்ளழகர் கோவிலின் இணை ஆணையர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

மதுரை மாவட்ட கலெக்டர் எந்த அதிகாரத்தின் அடிப்படையில் இந்த உத்தரவை பிறப்பித்தார்? சட்ட அலுவலர் அல்லது கோவில் நிர்வாகத்திடம் ஆலோசிக்கப்பட்டதா? என்பது குறித்து விளக்கமளிக்கும் வகையில் அவர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதிகள் உத்தரவிட்டு, வழக்கை வரும் 22-ம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

### சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சி:

# மதுரை மீனாட்சி அம்மனுக்கு இன்று பட்டாபிஷேக விழா

மதுரை, ஏப் 19-

சித்திரை திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான மதுரை மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் இன்று நடக்கிறது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் புகழ்பெற்ற சித்திரை திருவிழா கடந்த 12-ம் தேதி விமரிசையாக கொடியேற்றத்துடன் தொடங்கியது. 10 நாட்கள் நடக்கும் இந்த திருவிழாவில் நாள்தோறும் சுவாமி, அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி மாசி வீதிகளில் பக்தர்களுக்கு காட்சி அளித்து வருகின்றனர்.


சுவாமி தரிசனம் செய்ய இரவு நேரங்களில் 4 மாசி வீதிகளில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குவிவதால் சித்திரை திருவிழா களைகட்டியுள்ளது. விழாவின் 6-வது நாளான நேற்று முன்தினம் இரவு தங்க, வெள்ளி ரிஷப வாகனங்களில் பிரியாவிடையுடன் சுந்தரேசுவரர், மீனாட்சி அம்மனும் எழுந்தருளி வீதி உலா வந்தனர்.

அதை தொடர்ந்து 7-ம் நாளான நேற்று காலை தங்க சப்பரத்தில் சுவாமி, அம்மன் 4 மாசி வீதிகளில் உலா வந்து கோவிலில் உள்ள சிவகங்கை ராஜா மண்டகப்படியில் எழுந்தருளினர். இரவு நந்திகேசுவரர் வாகனத்தில் சுவாமியும், யாளி வாகனத்தில் அம்மனும் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

8-ம் நாளான இன்று காலை 10 மணிக்கு தங்க பல்லக்கில் எழுந்தருளும் சுவாமி, அம்மன் தெற்காவணி மூலவீதி வழியாக மேலமாசி வீதியில் உள்ள கட்டுச்சட்டி மண்டபத்தில் எழுந்தருளுகின்றனர். சிகர நிகழ்ச்சியான மீனாட்சி அம்மன் பட்டாபிஷேகம் இன்று இரவு நடக்கிறது. இரவு 7.35 மணி முதல் 7.59 மணிக்குள் மீனாட்சி அம்மன் சன்னதி முன்புள்ள ஆறுகால் பீடத்தில் பட்டாபிஷேகம் நடக்கிறது.

சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளும் மீனாட்சி அம்மனிடம் இருந்து அறங்காவலர் குழு தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன் செங்கோல் பெறுகிறார். இதற்காக அம்மன் ரத்தின ஆபரணங்கள் இழைத்த ராயர் கிரீடம், ரத்தின செங்கோலுடன் காட்சி அளிக்கிறார். மதுரை நகரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வகையில் மீனாட்சி அம்மனுக்கு பட்டாபிஷேகம் நடத்தப்படுவதாக ஐதீகம். சித்திரை முதல் ஆவணி வரை மதுரையில் மீனாட்சி ஆட்சி நடைபெறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -454.69 | -152.05 |
| பாயின்ட் 72488.99 | பாயின்ட் 21995.85 |



**தங்கம்**
1 சவரன் ₹ 54,680
1 கிராம் ₹ 6,835



**வெள்ளி**
1 கிலோ ₹ 90,000
1 கிராம் ₹ 90.00



**டாலர்** ₹ 83.58

**பெட்ரோல்** ₹ 101.57
**டீசல்** ₹ 93.18



### ஐக்கிய அரபு அமீரகத்தில் கனமழை:
# சென்னையில் இருந்து 2-வது நாளாக விமான சேவை ரத்து

**சென்னை, ஏப் 19-**

ஐக்கிய அரபு அமீரகத்தில் பெய்த கனமழையால் நேற்று இரண்டாவது நாளாக சென்னையில் இருந்து விமான சேவை ரத்து செய்யப்பட்டது. ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் நேற்று முன்தினம் பெய்த கனமழையால் பல்வேறு இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், சாலைகளில் மழைநீர் தேங்கியது. பல இடங்களில் வாகன போக்குவரத்தும் முடங்கியது.

கனமழை மற்றும் வெள்ளம் எதிரொலியாக, விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டது. துபாயில் சர்வதேச பயணிகள் அதிகம் வரக்கூடிய, உலகில் பரபரப்புடன் இயங்க கூடிய துபாய் சர்வதேச விமான நிலையத்தில் வெள்ளநீர் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இதனை தொடர்ந்து, விமான நிலையத்திற்கு வந்த பல விமானங்கள் வேறு பகுதிகளுக்கு திருப்பி விடப்பட்டன. விமான ஓடுபாதையில் வெள்ளம் புகுந்ததில், விமானங்கள் மற்றும் கார்கள், நீரில் பாதியளவு மூழ்கின. விமானங்கள் நிறுத்தும் பகுதியில் வெள்ளநீர் புகுந்தது.

விமான நிலையத்திற்கு வந்து சேரும் சாலைகளும் நீரில் மூழ்கி இருந்தன. கனமழை எதிரொலியால் சென்னையில் இருந்து துபாய் செல்லக்கூடிய 5 விமானங்கள் நேற்றுமுன்தினம் ரத்து செய்யப்பட்டிருந்தன. இதே போல், மறு மார்க்கத்தில் இருந்து சென்னை வரும் 5 விமானங்களும் ரத்து செய்யப்பட்டன.

இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தில் பெய்த கனமழையால் நேற்று இரண்டாவது நாளாக சென்னையில் இருந்து விமான சேவை ரத்து செய்யப்பட்டது. சென்னையில் இருந்து துபாய் செல்லும் விமானம் ரத்து தொடர்பாக தகவல் தெரிவிக்கப்படவில்லை என புகார் எழுந்துள்ளது.

துபாய் செல்ல வந்த 300-க்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிறுவன கவுன்டரில் வாக்குவாதம் நடைபெற்றது. விமான நிறுவன அதிகாரிகள் அலட்சியமாக செயல்படுவதாக பயணிகள் குற்றம் சாட்டினர்.

### இஸ்ரேல் உடனான ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு:
# போராட்டத்தில் ஈடுபட்ட கூகுள் ஊழியர்கள் 28 பேர் பணி நீக்கம்

**வாஷிங்டன், ஏப் 19-**

கூகுள் நிறுவனம் - இஸ்ரேல் இடையிலான கிளவுட் கம்ப்யூட்டிங் ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட 28 ஊழியர்களை அந்நிறுவனம் நீக்கியுள்ளது.

இஸ்ரேல் அரசு மற்றும் இஸ்ரேல் ராணுவத்துக்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் கிளவுட் சேவைகளை வழங்குவதற்காக அமேசான் நிறுவனத்துடன், கூகுள் நிறுவனம் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது.

1.2 பில்லியன் டாலர் மதிப்பீட்டில் புராஜெக்ட் நிம்பஸ் என்கிற இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக கூகுள் ஊழியர்கள் சுமார் 28 பேர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நியூயார்க் மற்றும் சன்னிவேல் அலுவலங்களில் சுமார் எட்டு மணி நேரத்துக்கும் மேலாக அவர்கள் உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினர். கூகுள் கிளவுட் சி.இ.ஓ. தாமஸ் குரியனின் அலுவலகத்தை விட்டு அகல மறுத்து ஊழியர்கள் சிலர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட 28 ஊழியர்களை கூகுள் நிறுவனம் நீக்கியுள்ளது. இதுதொடர்பாக கூகுள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மற்ற ஊழியர்களை வேலை செய்யவிடாமல் இடையூறு செய்வது, அலுவலகத்திற்குள் வர விடாமல் தடுப்பது நிறுவன கொள்கைகளை மீறும் செயலாகும். இந்த செயல் முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

அதனால், போராட்டம் செய்தவர்களை அலுவலக வளாகத்தை விட்டு வெளியேறும்படி பலமுறை கூறியும் கேட்கவில்லை. அதனால், விசாரணைக்கு பிறகு 28 ஊழியர்களை பணிநீக்கம் செய்துள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

### தங்கக் கட்டிகள் மற்றும் பணத்தை
# கொள்ளையடித்த ஏர் கனடா ஊழியர்கள் உட்பட 6 பேர் கைது

**கனடா, ஏப் 19-**

கனடாவில் ரூ.133 கோடி மதிப்பிலான தங்கக்கட்டிகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்த ஏர் கனடா ஊழியர்கள் உட்பட 6 பேரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். மேலும் 3 நபர்களை தேடி வருகின்றனர்.

ஏர் கனடாவில் பணிபுரிந்த இருவர் மற்றும் துப்பாக்கி கடத்தல்காரர் என்று கூறப்படும் ஒன்பது பேர் ஒரு வருடத்திற்கு முன்பு டொராண்டோவின் பியர்சன் விமான நிலையத்தில் இருந்து சுமார் 24 மில்லியன் டாலர் தங்கம் மற்றும் ரொக்கத்தை கொள்ளையடித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக 5,000-க்கும் அதிகமான திருட்டுச் சம்பவங்கள் உட்பட 19 குற்றவியல் குற்றச்சாட்டுகள் உள்ளதாக பீல் பிராந்திய காவல்துறை தெரிவித்துள்ளது. கடந்த 2023-ம் ஆண்டு ஏப்ரல் 17-ம் தேதி பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 400 கிலோ கிராம் எடையுள்ள 6,600 தங்கக் கட்டிகள் திருடப்பட்டது. அதன் மதிப்பு ரூ.20 மில்லியனுக்கும் அதிகமாக இருப்பதாகவும் காவல் துறை தெரிவித்தது.

திருடப்பட்ட தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயம் சுவிட்சர்லாந்தின் சூரிச்சில் உள்ள ஒரு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து ஆர்டர் செய்யப்பட்டதாகவும், மேலும் அவை டொராண்டோவிற்கு ஏர் கனடா விமானத்தின் மேலோட்டத்தில் கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

விமானம் 3:56 மணிக்கு வந்ததாகவும் ஏப்ரல் 17, 2023 அன்று தங்கமும் கரன்சியும் ஏற்றப்பட்டு விமான நிலையத்தில் உள்ள ஏர் கனடா சரக்கு வசதிக்கு கொண்டு வரப்பட்டது. ஒரு சந்தேக நபர் ஐந்து டன் டிரக்கை ஓட்டிக்கொண்டு சரக்கு வசதிக்கு வந்து, தனது டிரக்கில் கப்பலை ஏற்றிய கிடங்கு ஊழியர்களிடம் மோசடியான ஏர்வே பில் ஒன்றை வழங்கியுள்ளார்.

இது குறித்து அமெரிக்கா மற்றும் கனடா நாட்டு காவல் துறையினர் சிறப்பு படை அமைத்து விசாரணை நடத்தி வந்த நிலையில், சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஏர் கனடா ஊழியர், 54 வயதுடைய பிராம்ப்டன், ஒன்ட் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரை பிடித்து விசாரணை நடத்தியதில் கொள்ளையில் ஈடுபட்ட கும்பலை கண்டறிந்த அதிகாரிகள் 6 பேரை கைது செய்துள்ளனர்.

### சட்டவிரோத நுழைவு:
# அமெரிக்காவில் கஸ்டடியில் இருந்த இந்தியர் மரணம்

**நியூயார்க், ஏப் 19-**

இந்தியாவைச் சேர்ந்த ஜஸ்பால் சிங் (57), கடந்த ஆண்டு ஜூன் மாதம் அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக நுழைந்த போது கைது செய்யப்பட்டார். அமெரிக்கா -மெக்சிகோ எல்லையில் கைது செய்யப்பட்ட அவர், குடிவரவு மற்றும் சுங்க அமலாக்கத்துறையின் கஸ்டடியில் வைக்கப்பட்டிருந்தார். அவரை இந்தியாவுக்கு நாடு கடத்துவது தொடர்பாக அட்லாண்டாவில் வைத்து விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், அட்லாண்டாவின் செயின்ட் மேரிஸ் நகரில் உள்ள தென் கிழக்கு ஜார்ஜியா சுகாதார நிலையத்தில் கடந்த 15-ம் தேதி ஜஸ்பால் சிங் மரணம் அடைந்துள்ளார். அவர் மரணம் அடைந்த செய்தி, நியூயார்க்கில் உள்ள இந்திய துணைத் தூதரகத்திற்கும், அவரது குடும்பத்தினருக்கும் குடிவரவு மற்றும் சுங்க அமலாக்கத்துறை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங் மறைவுக்கான காரணம் குறித்த தகவல் வெளியாகவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகே, அவரது மரணத்துக்கான காரணம் தெரியவரும். 1992-ல் சட்டப்பூர்வமாக அமெரிக்காவிற்கு வந்த சிங், பல ஆண்டுகளாக தனது குடியேற்ற நிலை தொடர்பான சட்ட சிக்கல்களை எதிர்கொண்டார்.

1998-ல் வரை நாட்டை விட்டு வெளியேறும்படி குடிவரவு நீதிபதி உத்தரவிட்டார். அதன் பின்னர் தானாக வெளியேறிய சிங், கடந்த ஆண்டு அமெரிக்கா - மெக்சிகோ எல்லை வழியாக மீண்டும் நுழைய முயன்ற போது அவரை அமெரிக்காவின் சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதுவை வாக்குச்சாவடியில்
# தாமரை பூ வடிவில் அலங்காரம் தேர்தல் அதிகாரிகள் அகற்றினர்

**புதுச்சேரி, ஏப் 19-**

புதுச்சேரி பாகூரில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றில் தாமரைப் பூ வடிவிலான அலங்காரம் அமைக்கப்பட்டிருந்தது. இதற்கு கம்யூனிஸ்ட் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, அவற்றை தேர்தல் அதிகாரிகள் அகற்றி அப்புறப்படுத்தினர்.

புதுச்சேரி மக்களவை தொகுதிக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெற உள்ளது. நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் பிரச்சாரம் ஓய்ந்த நிலையில், நேரிலும், சமூக வலைதளம் மூலமாகவும் யாரும் வாக்கு கேட்கக் கூடாது என தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

விதிமுறையை மீறி அரசியல் கட்சியினர் வாக்கு சேகரிக்கிறார்களா எனவும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. வாக்குச்சாவடிகளில், வாக்குப் பதிவுக்கான முன்னேற்படுகளை தேர்தல் துறையினர் செய்து வருகின்றனர். வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களை வரவேற்க கூடிய வகையில் பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பாகூரில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் 11/23 என்ற எண் கொண்ட வாக்குச்சாவடியில் தாமரை பூ வடிவத்தில் நுழைவு வாயில் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. இதனைக் கண்ட பாகூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் விஜயபாலன், மணிவண்ணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சரவணன், முருகையன் மற்றும் பொதுமக்கள் நேற்று அந்த வாக்குச்சாவடி மையத்துக்கு சென்று பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களிடம் தேர்தல் விதிமுறையை மீறி, பா.ஜ.க. சின்னமாக தாமரை பூக்கள் வடிவத்தில் பிங்க் மற்றும் வெள்ளை நிரத்தில் பேப்பர் பூக்களால் நுழைவு வாயிலில் அலங்கரிக்கப்பட்டு இருப்பது குறித்து கேள்வி எழுப்பி வாக்குவாதம் செய்தனர்.

இதையடுத்து, தேர்தல் பிரிவு அதிகாரிகள் அங்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தாமரை பூ வடிவிலான பேப்பர் பூக்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தினர். பின்னர் அந்த பூக்களை அங்கிருந்த மற்றொரு அறையில் வைத்து பூட்டி சீல் வைத்தனர். இது தொடர்பான வீடியோ வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

### பாராளுமன்ற தேர்தல்:
# ஓட்டு போடுவதற்காக ஜப்பானில் இருந்து சேலம் வந்த வாக்காளர்

**சேலம், ஏப். 19-**

தமிழகத்தில் பாராளுமன்ற மக்களவை தேர்தல் இன்று நடைபெற உள்ள நிலையில், வாக்களிக்க சேலத்தை சேர்ந்த வாக்காளர் ஒருவர் ஜப்பானிலிருந்து தாயகம் திரும்பியுள்ளார்.

சேலம் மாவட்டம் கொண்டலாம்பட்டியைச் சேர்ந்தவர் சங்கர் (வயது 48). டிசைனிங் இன்ஜினியராக பணி புரியும் இவர், கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு வேலைக்காக ஜப்பான் நாட்டுக்கு சென்று உள்ளார். அங்கே தற்போது வரை 21 ஆண்டுகளாக வேலை பார்த்து வரும் போதிலும் அவர் ஜப்பான் குடியுரிமை பெறாமலேயே இருந்து வருகிறார்.

தமிழகத்தில் இன்று பாராளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் சேலம் பாராளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வீரபாண்டி சட்டசபை தொகுதி வாக்காளராக அவர் தனது வாக்கைப் பதிவு செய்வதற்காக ஜப்பானிலிருந்து விமானம் மூலம் கடந்த 11-ஆம் தேதி சேலத்திற்கு புறப்பட்டு வந்துள்ளார். இதற்காக அவர் விமானத்தில் வந்த வகையில் ஒரு ஓட்டுப் போடுவதற்காக ஒரு லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகையைச் செலவு செய்து ஜனநாயக கடமையாற்றச் சேலம் கொண்டலாம்பட்டி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகர் விஜய் நடித்த சர்க்கார் திரைப்படத்தில், விஜய் ஒரு ஓட்டுப் போடுவதற்காக இந்தியாவுக்கு வருவது போன்ற காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கும். அதைப் போன்று சங்கரும் ஜப்பானிலிருந்து சேலத்திற்கு ஓட்டுப் போட வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சத்தீஸ்கரில் நான்கு மாதத்தில் 80 நக்சல்கள் சுட்டுக் கொலை

**ராய்பூர், ஏப். 19-**

சத்தீஸ்கரில் இந்தாண்டில் நான்கு மாதங்களில் இது வரை 80 நக்சல்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2004-14 ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2014-23 வரை இடதுசாரி தீவிரவாதம் தொடர்பான வன்முறைகள் நாட்டில் 52 சதவிகிதம் குறைந்துள்ளது. 69 சதவிகிதம் இறப்பு எண்ணிக்கை 6,035இல் இருந்து 1,868 ஆக குறைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

மாநிலத்தில் முதல்வர் விஷ்ணு தியோ சாய் ஆட்சி உருவானதிலிருந்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் விளைவாக 80 நக்சல்கள் கொல்லப்பட்டனர். 125-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தாண்டு ஜனவரி முதல் 150 பேர் சரணடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டின் நக்சல் பாதித்த மாநிலங்களில் பாதுகாப்பு நிலைமையை விரிவாக ஆய்வு செய்ததைத் தொடர்ந்து, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மாவோயிஸ்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளுமாறு பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிட்டார்.

சத்தீஸ்கரின் காங்கர் மாவட்டத்தில் செவ்வாயன்று பாதுகாப்புப் படையினருடன் நடைபெற்ற மோதலில் 29 நக்சல்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கடுமையான துப்பாக்கிச் சண்டையில் மூன்று பாதுகாப்புப் படையினர் காயமடைந்தனர், மேலும் ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. கடந்த ஐந்தாண்டுகளில், மாவோயிஸ்டுகள் நடமாட்டம் உள்ள 90 மாவட்டங்களில் 5,000க்கும் மேற்பட்ட தபால் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதிகம் பாதிக்கப்பட்ட 30 மாவட்டங்களில் 1,298 வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டு 1,348 ஏடிஎம்கள் செயல்படத் தொடங்கியுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### பதிவான வாக்குகளை விவிபேட் சீட்டுகளுடன்
# ஒப்பிடக்கோரிய வழக்கில் தீர்ப்பை ஒத்திவைத்து சுப்ரீம் கோர்ட் உத்தரவு

**புதுடெல்லி, ஏப். 19-**

மின்னணு வாக்குப்பதிவு இயந்திர வாக்குகளை விவிபேட் சீட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கோரிய வழக்கில் தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இன்று முதல் 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவாகும் அனைத்து வாக்குகளையும், வாக்கு ஒப்புகைச் சீட்டுகளுடன் முழுமையாக ஒப்பிட்டு சரிபார்க்க உத்தரவிட கோரி, சுப்ரீம் கோர்ட்டில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்கள் மீதான விசாரணை நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, தீபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, கேரள மாநிலம் காசர்கோடு தொகுதியில் நடந்த மாதிரி வாக்குப்பதிவின்போது, தாமரை சின்னத்தில் ஒரு முறை வாக்களித்தால் இரண்டு வாக்குகள் விழுவதாக அரசியல் கட்சிகள் குற்றம்சாட்டியிருந்தது தொடர்பாக கேரள ஊடகங்களில் வெளியான செய்திகளை மனுதாரர்களில் ஒருவரான ஜனநாயக சீர்திருத்த சங்கம் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் பிரசாந்த் பூஷண் மேற்கோள்காட்டினார். இதையடுத்து, இந்த விவகாரம் குறித்து உடனடியாக விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது.

ஆனால், அந்த செய்திகளில் உண்மையில்லை என்றும், பொய்யான தகவல்கள் என்றும் தேர்தல் ஆணையம் சுப்ரீம் கோர்ட்டில் விளக்கம் கொடுத்தது. இந்த வழக்கில், மனுதாரர் தரப்பிலும், தேர்தல் ஆணையத்தின் தரப்பிலும் பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், விவிபேட் சீட்டுகளை எண்ணுவதற்கு தேர்தல் ஆணையம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. நேற்று விசாரணை நிறைவு பெற்ற நிலையில், விவிபேட் சீட்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கக் கோரிய மனுக்கள் மீதான தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தது சுப்ரீம் கோர்ட்.

# தமிழகத்தில் 24-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

**சென்னை,ஏப் 19-**

தமிழகத்தில் வரும் 24-ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று 19-ம் தேதி தமிழக உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலோர மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

நாளை 20-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்கள், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

வரும் 21-ம் தேதி முதல் 24-ம் தேதி வரை தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதியிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுவையில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

வரும் 22-ம் தேதி வரை தமிழகத்தில் வெப்பநிலை படிப்படியாக 2 டிகிரி செல்சியஸ் உயரக்கூடும். அதற்கு அடுத்த மூன்று தினங்களில் 2 - 3 டிகிரி செல்சியஸ் சற்றே குறையக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 37-38 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பாராளுமன்ற தேர்தல்:
# பேருந்தில் இன்று கட்டணமின்றி பயணிக்கலாம்: எங்கு தெரியுமா?

**சென்னை, ஏப். 19-**

கோவை, ஈரோடு, ஊட்டி, திருப்பூர் மண்டலங்களில் வாக்களிக்க செல்லும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் இன்று கட்டணமின்றி பயணிக்கலாம் என மேலாண் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் இன்று தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முதல் கட்டமாக தமிழ்நாட்டில் 39 தொகுதிகளுக்கும் இன்று (ஏப். 19) ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்த நிலையில், கோவை, ஈரோடு, ஊட்டி, திருப்பூர் மண்டலங்களில் வாக்களிக்க செல்லும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை கட்டணமின்றி பயணிக்கலாம் என மேலாண் இயக்குனர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், கூறப்பட்டுள்ளதாவது., “19.04.2024 அன்று நடைபெறும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வாக்களிக்க ஏதுவாக தேர்தல் தினத்தன்று மட்டும் ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை காண்பித்து வாக்களிக்க பயணம் மேற்கொள்ளும் 60 வயதிற்கு மேற்பட்ட மூத்தகுடி மக்கள், பார்வை குறைபாடு மற்றும் அனைத்து மாற்றுத்திறனாளிகளையும் நமது போக்குவரத்து கழக சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் எவ்வித பயணச்சீட்டும் வழங்காமல் கட்டணமின்றி 19.04.2024 அன்று காலை 6.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை வாக்களிக்க அழைத்துச் செல்ல அனைத்து ஓட்டுனர் மற்றும் நடத்துனர்களுக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நடிகை ஷில்பா ஷெட்டியின் ரூ.98 கோடி சொத்துகள் முடக்கம்
### அமலாக்கத்துறை நடவடிக்கை

**புதுடெல்லி, ஏப் 19-**

பிரபல பாலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டி மற்றும் அவரது கணவர் ராஜ் குந்த்ராவுக்கு சொந்தமான புனே பங்களா மற்றும் பங்கு பத்திரங்கள் உட்பட, 97.79 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத்துறையினர் முடக்கி உள்ளனர்.

பிட்காயின் மோசடி வழக்குடன் தொடர்புடைய பண மோசடி வழக்கில் இந்த நடவடிக்கையை அமலாக்கத்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

வேரியபிள் டெக் நிறுவனம் பெரும் மோசடியை நிகழ்த்தி வருவதாக புகார்கள் வந்ததையடுத்து டெல்லி மற்றும் மும்பை காவல்துறை வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தியது.

அந்த நிறுவனத்தை நடத்தி வந்த அமீத் பரத்வாஜ், அஜய் பரத்வாஜ், விவேக் பரத்வாஜ், சிம்பி பரத்வாஜ் மற்றும் மகேந்திரா பரத்வாஜ், நிறுவனத்தின் ஏஜெண்டுகள் உள்ளிட்டோர் கடந்த 2017-ம் ஆண்டு பிட்காயின் மூலமாக முதலீட்டாளர்களை மோசடி செய்து 6600 கோடியை சுருட்டி இருப்பது விசாரணையில் தெரியவந்தது.

இந்த வழக்குகளின் அடிப்படையில் பண மோசடி வழக்கு பதிவு செய்த அமலாக்கத் துறையினர் தீவிரமாக விசாரணை நடத்தினர். விசாரணையில், 150 கோடி ரூபாய் மதிப்பிலான 285 பிட்காயின்களை ராஜ் குந்த்ரா வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, ராஜ் குந்த்ரா, ஷில்பா ஷெட்டி ஆகியோரின் சொத்துக்களை அமலாக்கத் துறையினர் முடக்கி உள்ளனர். இது பாலிவுட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வேரியபிள் டெக் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் முதலீட்டாளர்களை ஏமாற்றி, தவறான ஆன்லைன் வாலட்டுகளில் பிட்காயின்களை மறைத்து வைத்துள்ளனர். உக்ரைனில் பிட்காயின் மைனிங் அமைப்பதற்காக இந்த மோசடியின் மூளையாக விளங்கும் அமித் பரத்வாஜிடம் இருந்து 285 பிட்காயின்களைப் பெற்றதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

### இன்று வேட்புமனு தாக்கல் செய்கிறார் அமித்ஷா:

# காந்திநகர் தொகுதி ரோடுஷோவில் தொண்டர்கள் பிரம்மாண்ட வரவேற்பு

**ஆமதாபாத், ஏப் 19-**

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இன்று வேட்புமனுத் தாக்கல் செய்கிறார். முன்னதாக நேற்று தனது காந்திநகர் தொகுதியில் ரோடு ஷோவில் பங்கேற்ற அவருக்கு தொண்டர்கள் பிரம்மாண்ட வரவேற்பு அளித்தனர்.

தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களில் இன்று முதல் கட்ட மக்களவை தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் முடிவடைந்தது. இந்த நிலையில் குஜராத்தில் உள்ள 26 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக மே 7-ல் தேர்தல் நடைபெறுகிறது. இதில் காந்திநகர் தொகுதியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா மீண்டும் போட்டியிடுகிறார்.

கடந்த தேர்தலில் சுமார் 5 லட்சம் வாக்குகளை பெற்று அவர் வெற்றி பெற்றிருந்தார். அதற்கு முன்னதாக பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே.அத்வானி போட்டியிட்டு வென்றிருந்தார். இந்த நிலையில் காந்திநகர் தொகுதியில் இன்று அமித்ஷா வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார். இதனையடுத்து நே ற்று காந்திநகரில் ரோடு ஷோ நடத்திய அமித்ஷாவுக்கு தொண்டர்கள் பிரம்மாண்ட வரவேற்பு அளித்தனர்.

# 4-ம் கட்ட பார்லி. தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் துவங்கியது

**புது டெல்லி, ஏப் 19-**

பாராளுமன்ற தேர்தலின் 4-ம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது.

நாடு முழுவதும் 18-வது பாராளுமன்ற தேர்தல் இன்று 19-ம் தேதி தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது. தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 பாராளுமன்ற தொகுதிகளிலும் முதல் கட்டத்திலேயே தேர்தல் நடக்கிறது. இந்த 40 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது.

இந்த நிலையில், ஏழு கட்டங்களாக நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தலின் 4-ம் கட்ட தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது. தேர்தலுக்கான வாக்குப்பதிவு மே 13-ம் தேதி நடைபெறுகிறது. ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசம், தெலுங்கானா, பீகார், ஜார்கண்ட், மத்தியபிரதேசம், மராட்டியம், ஒடிசா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் பல்வேறு தொகுதிகள் 4-வது கட்ட தேர்தலை எதிர்கொள்கின்றன. ஆந்திரபிரதேசத்தில் மே 13-ம் தேதி பாராளுமன்ற தேர்தலுடன், சட்டப்பேரவைத் தேர்தலும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### விழிப்போடு செயல்பட வேண்டும்:

# தி.மு.க. வாக்குச்சாவடி முகவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

**சென்னை, ஏப் 19-**

வாக்குச்சாவடி முகவர்கள் விழிப்போடு செயல்பட வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்

இது குறித்து தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மொத்தம் 7 கட்டங்களாக நடைபெறவிருக்கும் இந்தியாவின் 18-வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தமிழகத்தின் 39 மக்களவைத் தொகுதிகளும் புதுச்சேரியின் ஒரு மக்களவைத் தொகுதியும் உள்ளடங்கிய 102 தொகுதிகளிலும் நடைபெறுகிறது.

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் பாராளுமன்ற மக்களவைத் தேர்தலை அறிவித்த நாளிலிருந்து உடன்பிறப்புகளாம் நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கிப் பணியை மேற்கொண்டு, தோழமைக் கட்சியினருடன் ஒருங்கிணைந்து, மிகக் குறைந்த கால அவகாசத்திற்குள் வாக்காளர்களைச் சந்தித்து ஆதரவைப் பெற்று, வெற்றியை உறுதி செய்து, தேர்தல் பணியில் தி.மு.க.வினரை மிஞ்ச எவரும் கிடையாது என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறீர்கள்.

நான் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறேன். களத்தில் நமக்கு கிடைத்துள்ள ஆதரவு வாக்குகளாக பதிவாகி வெற்றியாக வெளிப்படும் என்பதில் உறுதியுடன் இருக்கிறேன். அந்த நம்பிக்கையும் உறுதியும் நிறைவேற வாக்குப்பதிவு நாளான 19-ம் தேதி(இன்று) அன்று தி.மு.க.வினர் மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும்.

அப்போதுதான் இத்தனை நாள் பாடுபட்டது பயன் தரும். தமிழகத்தில் இண்டியா கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்ய வேண்டிய கடமை நமது கட்சித் தொண்டர் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. மாவட்ட செயலாளர்கள் தொடங்கி கிளைக் கழக நிர்வாகிகள் வரை தங்களுக்கான பணிகளை திட்டமிட்டுக் கொண்டு செயலாற்றுவதுடன் வாக்குச்சாவடிப் பணிகளில் ஈடுபடக் கூடிய முகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் தான் வாக்குப்பதிவு நாளின் முன்களப் பணியாளர்கள், முழுமையான போர் வீரர்கள். இதில் வாக்குச்சாவடி முகவர்கள், மாற்று முகவர்கள் ஆகியோர் வாக்குப்பதிவு தொடங்கி நிறைவடையும் வரை விழிப்புடன் செயலாற்ற வேண்டிய பணியில் இருப்பதால் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை முழுமையாக அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

அதற்கான பயிற்சியினை நமது சட்டத்துறையின் உதவியுடன் ஏற்கனவே வழங்கியுள்ள நிலையில் வாக்குப்பதிவு நாளன்று மறக்காமல் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை நினைவூட்ட விரும்புகிறேன்.

காகித வாக்குச் சீட்டுக்குப் பதில், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பொதுமக்கள் வாக்களிப்பதால் நாம் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளும் கவனிக்க வேண்டிய நடைமுறைகளும் நிறைய உள்ளன. அவை நம் தி.மு.க.வின் சட்டத்துறை சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் மூலமாக உங்களிடம் கையேடாக வழங்கப்பட்டிருக்கும்.

அவற்றைக் கவனத்தில் கொண்டு வாக்குச்சாவடி முகவர்கள் விழிப்போடு செயல்படவேண்டும். முகவர்கள் உள்ளிட்ட கட்சி தேர்தல் பணிகளை மேற்கொள்வோர் இவை ஒவ்வொன்றையும் உறுதி செய்ய வேண்டும். வாக்குப்பதிவில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் சரியாக அமைந்தால்தான் வாக்கு எண்ணிக்கையின் போது தி.மு.க. கூட்டணியின் முழுமையான வெற்றி உறுதியாகும். விரைந்து களப்பணியாற்றி, வியர்வை சிந்தி விதைத்தவை அனைத்தும் அறுவடையாகும் நாள்தான் வாக்குப்பதிவு நாள். அதனால் மிகந்த விழிப்புடன் பணியாற்றுங்கள். வாக்குரிமையை நிலைநாட்டுவோம். மகத்தான வெற்றியை ஈட்டுவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் பெண்களுக்கு பிங்க் நிற வாக்குச்சாவடி மையம்



**சென்னை, ஏப் 19-**

சென்னையில் 16 இடங்களில் பிரத்யேகமாக பெண்களுக்கென பிங்க் நிற வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் 18-வது பாராளுமன்ற தேர்தல் இன்று தொடங்கி வரும் ஜூன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது. தமிழகம், புதுச்சேரியில் உள்ள 40 பாராளுமன்ற தொகுதிகளிலும் முதல் கட்டத்திலேயே தேர்தல் நடக்கிறது. இந்த 40 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

இன்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்குகிறது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. பொதுமக்கள் சிரமமின்றியும் கால தாமதமின்றியும் ஓட்டு போடுவதற்கு வசதியாக 68 ஆயிரத்து 321 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் 3 ஆயிரத்து 726 வாக்குச்சாவடிகள் 944 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் 685 பதற்றமான வாக்குச்சாவடிகளும், 23 மிகவும் பதற்றமான வாக்குச்சாடிகளும் என 708 வாக்குச்சாவடிகள் இதில் அடங்கும்.

இந்த நிலையில், சென்னையில் 16 இடங்களில் பிங்க் நிற வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் கர்ப்பிணிகள், கைக்குழந்தையுடன் வருபவர்கள் மற்றும் மூதாட்டிகளுக்கு தனி வரிசை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கு பிரத்யேக வசதிகளுடன் உதவி மையம், முதியோர் ஓய்விடம், குழந்தைகள் விளையாடும் இடம், சாய்தளம் உள்ளிட்ட அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. இங்கு பணியாற்றும் அனைத்து அலுவலர்கள், ஊழியர்கள், போலீசார் என அனைவரும் பெண்கள் ஆகும்.

கோடை வெயிலில், பெண்கள் நீண்ட நேரம் வரிசையில் நிற்க சிரமப்படுவார்கள் என்பதால் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பெண்களுக்காக பிரத்யேகமாக அமைக்கப்பட்டிருந்தாலும், இங்கு அனைவரும் வாக்களிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமேதி தொகுதியில் இந்த முறை போட்டியிட தயங்குகிறார் ராகுல்

## கேரள பிரச்சாரத்தில் ராஜ்நாத் சிங் விமர்சனம்

**திருவனந்தபுரம், ஏப் 19-**

கடந்த முறை அமேதி தொகுதியில் தோல்வியடைந்த காரணத்தால் ராகுல் காந்தி இந்த முறை அங்கு போட்டியிடத் தயங்குகிறார் என்று கேரளாவில் நடந்த பிரச்சாரத்தின் போது மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங் விமர்சித்தார்.

கேரள மாநிலம் கோட்டயத்தில் நடந்த பா.ஜ.க. தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது,

இன்னும் 5 ஆண்டுகளில் பா.ஜ.க. ககன்யான் திட்டத்தைத் தொடங்க உள்ளது. ஆனால், கடந்த 20 ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சியின் இளம் தலைவரின் அறிமுகம் இன்னும் நிகழ்த்தப்படவில்லை. காங்கிரசின் ராகுல்யான் இன்னும் எங்கும் நிலைநிறுத்தப்படவில்லை.

உத்தரப் பிரதேசத்தில் இருந்து கேரளாவுக்கு ராகுல் காந்தி புலம்பெயர்ந்துள்ளார். கடந்த முறை அமேதி தொகுதியில் தோல்வியடைந்த காரணத்தால் ராகுல் காந்தி இந்த முறை அங்கு போட்டியிடத் தயங்குகிறார்.

இந்த முறை வயநாட்டிலும் ராகுல் காந்தி வெற்றி பெற மாட்டார். வயநாடு தொகுதி மக்கள் இம்முறை ராகுலை தேர்ந்தெடுக்க மாட்டோம் என்று முடிவு செய்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன் என்று தெரிவித்தார்.

முன்னதாக, நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில், மக்களவைத் தேர்தலில் அமேதி அல்லது ரேபரேலியில் போட்டியிடுவீர்களா என்ற கேள்விக்கு பதிலளித்த ராகுல் காந்தி,

இது பா.ஜ.க.வின் கேள்வி. எனக்கு கட்சி தலைமையிடம் இருந்து எந்த உத்தரவு வந்தாலும் அதை நான் பின்பற்றுவேன். எங்கள் கட்சியில், வேட்பாளர் தேர்வு முடிவுகள் அனைத்தும் கட்சித் தலைமையால்தான் எடுக்கப்படுகின்றன என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த 2019-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் ராகுல் காந்தி கேரளாவின் வயநாடு மற்றும் உத்தரப் பிரதேசத்தின் அமேதி தொகுதிகளில் போட்டியிட்டார். இதில் அமேதியில் பா.ஜ.க.வின் ஸ்மிருதி இரானியிடம் ராகுல் தோல்வியடைந்தார். என்பது குறிப்பிடத்தக்கது. இதனிடையே கேரளா காங்கிரஸின் மூத்தத் தலைவரும் முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சருமான ஏ.கே.அந்தோணியின் மகனும், பா.ஜ.க. வேட்பாளருமான அனில் அந்தோணியை ஆதாரித்து பேசிய ராஜ்நாத் சிங்,

அவர் (ஏ.கே.அந்தோணி) கொள்கை பிடிப்பு மிக்கவர் என்பது எனக்குத் தெரியும். அவரது நிர்பந்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அனில் அந்தோணியை ஆதரிப்பது அவருக்கு மிகவும் கடினம். எனினும், அனில் உங்களின் மகன் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் அனில் அந்தோணிக்கு வாக்களிக்காமல் போகலாம். வாக்களிக்கச் சொல்லி பிரச்சாரம் செய்யாமல் இருக்கலாம். என்றாலும் நீங்கள் அவரின் தந்தை. அதனால் உங்களின் ஆசீர்வாதம் எப்போதும் அவருக்கு வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

# ஜாமீனுக்காக வேண்டுமென்றே இனிப்பு சாப்பிடுகிறார் கெஜ்ரிவால்

## அமலாக்கத் துறை குற்றச்சாட்டு

**புது டெல்லி, ஏப் 19-**

டெல்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் ஜாமீனுக்காக வேண்டுமென்றே மாம்பழங்கள், இனிப்புகள், சர்க்கரை சேர்த்த தேநீர் ஆகியனவற்றை உட்கொள்கிறார் என்று அமலாக்கத் துறை குற்றம்சாட்டியுள்ளது.

சர்க்கரை நோயாளியான அவர் தனது ரத்த சர்க்கரை அளவை அதிகரிக்கும் வகையில் இவ்வாறு செய்கிறார் என்றும் அமலாக்கத்துறை குற்றம்சாட்டியுள்ளது.

கெஜ்ரிவாலின் ரத்த சர்க்கரை அளவை தொடர்ச்சியாக கண்காணிக்க வேண்டும்.

அவர் அவருடைய மருத்துவரை சந்திக்க அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து டெல்லி நீதிமன்றத்தில் கெஜ்ரிவால் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கெஜ்ரிவாலின் ரத்த சர்க்கரை அளவு அடிக்கடி மாறுபடுவதாக கூறி இந்தக் கோரிக்கையை அவரது தரப்பு முன்வைத்துள்ளது. வாரத்தில் 3 நாட்கள் வீடியோ கான்பரன்ஸிங் மூலம் மருத்துவரிடம் ஆலோசிக்க அனுமதி கோரப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து அமலாக்கத் துறை தரப்பு வழக்கறிஞர் ஜோஹப் ஹுசைன்,

ரத்த சர்க்கரை அளவு அதிகமாக இருப்பதாகக் கூறும் நபர் சிறையில் தினமும் மாம்பழங்கள் சாப்பிடுகிறார். இனிப்பு வகைகள், சர்க்கரை கலந்த தேநீர் என உட்கொள்கிறார்.

தனது ரத்த சர்க்கரை அளவு அதிகரித்துவிட்டதாகக் கூறி மருத்துவக் காரணங்களுக்காக ஜாமீன் கோரும் முனைப்போடு வேண்டுமென்றே கெஜ்ரிவால் இவ்வாறு செய்கிறார் என்றார்.

இதனை எதிர்த்த கெஜ்ரிவாலின் வழக்கறிஞர் விவேக் ஜெயின், ஊடகங்களுக்கு தீனி போட வேண்டும் என்பதற்காகவே அமலாக்கத் துறை இத்தகைய வாதத்தை முன்வைத்துள்ளது. கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனுவைத் திரும்பப் பெறுகிறேன். வேறொரு மேம்பட்ட மனு தாக்கல் செய்யப்படும் என்றார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், கெஜ்ரிவாலின் உடல்நிலை பற்றிய மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கூறி விசாரணையை வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைத்தனர்.

# பா.ஜ.க. சித்தாந்தங்களை தோற்கடிக்க போகிறோம்

## காங். தொண்டர்களுக்கு ராகுல் வேண்டுகோள்

**புது டெல்லி, ஏப் 19-**

பா.ஜ.க.வையும் அவர்களின் சித்தாந்தத்தையும் தோற்கடிக்கப் போகிறோம் என்று காங்கிரஸ் தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். பாராளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் இன்று தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. தமிழகத்தில் 39 தொகுதிகள், புதுச்சேரி என மொத்தம் 40 தொகுதிகளிலும் இன்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4-ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. அதன்படி முதற்கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற உள்ள 102 தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் நேற்று முன்தினம் மாலை 6 மணியுடன் நிறைவு பெற்றது. இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்தி அக்கட்சியின் தொண்டர்களுக்கு தனது டுவிட்டர் பக்கத்தில் வீடியோ மூலம் பல்வேறு வேண்டுகோள்களை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டிருப்பதாவது,

பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் நாட்டின் கொள்கைக்கு எதிராக உள்ளனர். இவர்கள் நமது அரசியலமைப்பு சட்டம் மற்றும் ஜனநாயக கட்டமைப்பை சிதைக்கின்றனர். அதேபோன்று தேர்தல் ஆணையம் உள்ளிட்ட தன்னாட்சி அமைப்புகளின் கட்டமைப்பை அழிக்க நினைக்கின்றனர். எனவே பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சித்தாந்தத்தை எதிர்த்து காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் வீதியில் இறங்கி போராட வேண்டும். காங்கிரசின் முதுகெலும்பு கட்சியின் தொண்டர்களாகிய நீங்கள்தான். உங்கள் மீது மிகுந்த நம்பிக்கை உள்ளது.

நீங்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சித்தாந்தங்களுக்கு எதிராக தெருக்களிலும், கிராமங்களிலும் எல்லா இடங்களிலும் போராடி வருகிறீர்கள். நீங்கள்தான் பாதுகாவலர்கள். மக்களவை தேர்தலையொட்டி காங்கிரஸ் சிறப்பான தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

நாட்டு மக்களிடம் இருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை தேர்தல் அறிக்கையில் இடம் பெற செய்த காங்கிரஸ் தொண்டர்களுக்கு நன்றி. பா.ஜ.க.வையும் அவர்களின் சித்தாந்தத்தையும் தோற்கடிக்கப் போகிறோம். இவ்வாறு அவர் அந்த வீடியோவில் தெரிவித்துள்ளார்.

# கேரளாவில் நடந்த மாதிரி வாக்கு பதிவில் முறைகேடு ஏதும் இல்லை

## தேர்தல் ஆணையம் மறுப்பு

**திருவனந்தபுரம்,ஏப் 19-**

கேரளாவில் நடந்த மாதிரி வாக்குப்பதிவில் முறைகேடு ஏதும் இல்லை என்று தேர்தல் ஆணையம் மறுப்பு தெரிவித்துள்ளது.

கேரளா மாநிலம் காசர்கோடு தொகுதியில் நேற்று முன்தினம் நடந்த மாதிரி வாக்குப்பதிவின்போது, 4 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பா.ஜ.க.வுக்கு சாதகமாக வாக்குகளை பதிவு செய்ததாக தகவல்கள் வெளியாகின.

ஒரு முறை வாக்குப் பொத்தானை அழுத்தினால் பா.ஜ.க.விற்கு 2 வாக்குகள் விழுந்ததாகவும், வி.வி.பாட் இயந்திரத்தில் இரண்டு ஒப்புகைச் சீட்டுகள் பிரின்ட் ஆனதாகவும் புகார்கள் எழுந்தன.

இதனிடையே வாக்கு இயந்திரத்தில் பதிவான வாக்குகளை வி.வி.பாட் சீட்டுடன் சரிபார்ப்பதை கட்டாயமாக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த நிலையில், கேரள மாநிலம் காசர்கோட்டில் நடந்த மாதிரி வாக்குப் பதிவில் கூடுதல் வாக்கு பதிவானதாக எழுந்த குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க தலைமைத் தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் அறிவுறுத்தியிருந்தனர்.

இந்நிலையில் வாக்குப்பதிவு இயந்திரத்தில் முறைகேடு செய்ய வாய்ப்பே இல்லை என தேர்தல் ஆணையம் சுப்ரீம் கோர்ட்டில் பதிலளித்துள்ளது. காசர்கோட்டில் மாதிரி வாக்குப்பதிவில் பா.ஜ.க.வுக்கு கூடுதல் வாக்கு பதிவானதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என்றும், கூடுதல் வாக்கு பதிவானதாக வெளியான தகவல் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தேர்தல் நடைமுறை தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளில் அடிப்படை இல்லை என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும் வாக்குச்சீட்டு முறையை கோருவது பிற்போக்குத்தனமானது என்றும், அனைத்து பாதுகாப்பு அம்சங்களும் உறுதி செய்யப்பட்டதால் தேர்தலில் மோசடிக்கு வாய்ப்பில்லை என்றும் தேர்தல் ஆணையம் விளக்கமளித்துள்ளது.

# பாராளுமன்ற தேர்தல்: தியேட்டர்களில் இன்று சினிமா காட்சிகள் ரத்து

**சென்னை, ஏப். 19-**

பாராளுமன்ற தேர்தலையொட்டி தமிழகத்தில் உள்ள தியேட்டர்களில் இன்று சினிமா காட்சிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

தமிழகம் முழுவதும் பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது. பொதுமக்கள் ஓட்டுப்போட வசதியாக அரசு விடுமுறை அறிவித்துள்ளது. தனியார் நிறுவனங்களுக்கும் விடுமுறை விடப்பட்டுள்ளது. இந்த நிலையில் தேர்தலையொட்டி, வாக்காளர்கள் வாக்களிப்பதை தவறவிடக்கூடாது என்பதற்காக தமிழகத்தில் உள்ள தியேட்டர்களில் சினிமா காட்சிகள் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்க பொதுச்செயலாளர் பன்னீர் செல்வம் கூறியதாவது:-

பாராளுமன்ற தேர்தலையொட்டி இன்று (19-ந் தேதி) தியேட்டர்களில் 4 சினிமா காட்சிகள் ரத்து செய்யப்படுகிறது. காலை, மதியம், மாலை மற்றும் இரவு காட்சிகள் நடைபெறாது. அரசு தேர்தலுக்காக ஒரு நாள் விடுமுறை அறிவித்துள்ளது. எனவே திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம் ஒரு நாள் முழுவதும் 4 காட்சிகளை ரத்து செய்ய அதிகாரப்பூர்வமாக முடிவு எடுத்து அறிவித்துள்ளது. 2 காட்சிகள் மட்டுமே ரத்து செய்வதின் மூலமாக ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் அவர்கள் தான் எதிர்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

தமிழகம் முழுவதும் 1,126 திரையரங்குகள் உள்ளன என்றும் அனைத்து திரையரங்குகளிலும் காட்சிகள் ரத்து செய்யப்படும் என்றும் சங்கத்தின் இணை செயலாளர் ஸ்ரீதர் கூறினார்.

# இன்று நடைபெறும் முதற்கட்ட தேர்தலில் முன்னாள் கவர்னர், 8 மத்திய அமைச்சர்கள், 2 முன்னாள் முதல்வர்கள் போட்டி

**சென்னை, ஏப். 19-**

இன்று நடைபெறும் முதல்கட்ட தேர்தலில் முன்னாள் கவர்னர், 8 மத்திய அமைச்சர்கள், 2 முன்னாள் முதலமைச்சர்கள் களத்தில் உள்ளனர்.

நாடு முழுவதும் இன்று தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முதல் கட்டமாக 21 மாநிலங்கள்-யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளுக்கு இன்று (ஏப்.19) நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் முன்னாள் கவர்னர், 8 மத்திய அமைச்சர்கள், 2 முன்னாள் முதலமைச்சர்கள் களத்தில் உள்ளனர்.

அதன்படி, தெலங்கானா கவர்னராகவும் புதுச்சேரி துணைநிலை ஆளுநகராகவும் பதவி வகித்த தமிழிசை சௌந்தரராஜன், தனது பதவிகளை கடந்த மாதம் ராஜிநாமா செய்தார். பாஜக அவரை தென் சென்னை தொகுதியில் வேட்பாளராக பாஜக களமிறக்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் நீலகிரி தொகுதியில் முன்னாள் மத்திய அமைச்சரும் தி.மு.க. எம்.பி.யுமான ஆ.ராசாவும், தற்போதைய மத்திய அமைச்சரும் பாஜக எம்.பி-யுமான எல்.முருகனும் போட்டியிடுகின்றனர். மத்திய அமைச்சர் எல்.முருகன், முதல் முறையாக மக்களவைத் தேர்தலில் போட்டியிடுகிறார்.


மகாராஷ்டிரத்தின் நாக்பூர் தொகுதியில் 3-வது முறையாக மத்திய சாலை, நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி போட்டியிடுகிறார். அவர் கடந்த 2014 மக்களவைத் தேர்தலில் 7 முறை எம்.பி-யாக இருந்த விலாஸ் முத்தேம்வாரை எதிர்த்து போட்டியிட்டு 2.84 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதேபோல் நிதின் கட்கரி கடந்த 2019 தேர்தலில் மாநில காங்கிரஸ் தலைவர் நானா படோலேயைவிட 2.16 லட்சம் வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். அருணாசல பிரதேசத்தின் அருணாசல் மேற்கு தொகுதியில் போட்டியிடும் மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு, இந்தத் தொகுதியில் 3 முறை வெற்றி பெற்றவர். அவரை எதிர்த்து மாநில காங்கிரஸ் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான நாவம் துகி போட்டியிடுகிறார். மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சரும், தற்போதைய எம்.பியுமான சர்வானந்த சோனோவால் அசாமின் திப்ரூகர் தொகுதியில் போட்டியிடுகிறார். உத்தர பிரதேசத்தின் முசாபர்நகரில் மத்திய அமைச்சர் சஞ்சீவ் பாலியான் போட்டியிடுகிறார். இவரை எதிர்த்து, சமாஜ்வாதியின் ஹரீந்திர மாலிக் போட்டியிடுகிறார். இவர்களுடன் பகுஜன் சமாஜ் வேட்பாளர் தாரா சிங் பிரஜபதியும் களத்தில் உள்ளார். மத்திய அமைச்சரவையில் இணை அமைச்சராக உள்ள ஜிதேந்திர சிங், ஜம்மு-காஷ்மீரின் உதம்பூர் தொகுதியில் 3வது முறையாக களமிறங்குகிறார். இவர் 2 முறை எம்.பியாக இருந்துள்ளார். மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ் ராஜஸ்தானின் ஆல்வார் தொகுதியில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் எம்எல்ஏ லலித் யாதவ் போட்டியிடுகிறார். அதே போல் ராஜஸ்தானின் பிகானீர் தொகுதியில் மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து காங்கிரஸ் முன்னாள் அமைச்சர் கோவிந்த் ராம் மேக்வால் போட்டியிடுகிறார். திரிபுராவில் உள்ள இரு தொகுதிகளில் மேற்கு திரிபுரா தொகுதிக்கு இன்று தேர்தல் நடைபெறுகிறது. இந்த தொகுதியில், பாஜக சார்பில் மாநிலத்தின் முன்னாள் முதல்வர் விப்லவ் குமார் தேவ் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து மாநில காங்கிரஸ் தலைவர் ஆசிஷ்குமார் சாஹா களத்தில் உள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் சித்தாந்தத்தை எதிர்த்து காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் வீதியில் இறங்கி போராட வேண்டும். இவர்கள் நமது அரசியலமைப்பு சட்டம் மற்றும் ஜனநாயக கட்டமைப்பை சிதைக்கின்றனர். தேர்தல் ஆணையம் உள்ளிட்ட தன்னாட்சி அமைப்புகளின் கட்டமைப்பை அழிக்க நினைக்கின்றனர்.

- ராகுல் காந்தி



கடந்த 2019 மக்களவை தேர்தலில் அமேதி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த பிறகு, ராகுல் காந்திக்கு மீண்டும் அந்த தொகுதியில் போட்டியிடுவதற்கான தைரியம் இல்லை. அதனால் அவர் உத்தர பிரதேசத்தில் இருந்து கேரளாவுக்கு இடம் பெயர்ந்துவிட்டார். இந்தமுறை அங்கு அவர் வெல்வது கடினம்.

- ராஜ்நாத் சிங்



அம்பேத்கரின் அரசியல் சட்டத்தை மாற்றுவதும், அனைத்துவகையான இடஒதுக்கீடுகளையும் ரத்து செய்வதும்தான் பிரதமர் மோடியின் நோக்கம். அரசியல் சட்டம் இல்லாவிட்டால், ஜனநாயகம் இருக்காது. ஜனநாயகம் உயிருடன் இல்லாவிட்டால், உங்கள் உரிமைகளை பாதுகாக்க முடியாது.

- பிரியங்கா காந்தி



தீரன் சின்னமலையின் வீர வரலாறு மாணவர்களுக்கு கற்பிக்கப்பட வேண்டும். அதற்காக இந்தியா முழுவதும் அனைத்து மாநில மொழிப்பாடங்களிலும் தீரன் சின்னமலையின் வாழ்க்கை வரலாற்றை சேர்க்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும்.

- அன்புமணி

# சினிமா CINI செய்திகள்

## ரோமியோ - விமர்சனம்



திருமணமே பிடிக்காத கதாநாயகிக்கு திருமணத்திற்குப் பிறகு நாயகியை நாயகன் ஒன்சைடாக காதல் செய்து எப்படி கரெக்ட் செய்கிறார் என்ற கதைக் கருவை வைத்துக் கொண்டு சுவாரஸ்யமான திரைக்கதை மூலம் படத்தை கொடுத்திருக்கிறார் இயக்குநர் விநாயக் வைத்தியநாதன். தன் குடும்பத்திற்காக வாங்கிய கடனை அடைக்க மலேசியா சென்று சம்பாதித்து அனைத்து பிரச்சனைகளையும் முடித்துவிட்டு இந்தியாவிற்கு திரும்புகிறார் விஜய் ஆண்டனி. இதனாலேயே அவருக்கு வயது முதிர்ந்து விடுகிறது. ஐடியில் வேலை செய்வதாக பொய் சொல்லிவிட்டு சினிமாவில் ஹீரோயினாக வர வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருப்பவர் மிருணாளினி..

இந்நிலையில், ஒரு மரண நிகழ்வில் நாயகி மிருணாளினியை பார்க்கும். விஜய் ஆண்டனிக்கு கண்டவுடன் காதல் ஏற்படுகிறது. திருமணம் நடக்கிறது.

திருமணத்திற்கு பிறகு மிருணாளினியின் சுயரூபம் கண்டு அதிர்ச்சிக்கு உள்ளாகும் விஜய் ஆண்டனி மனைவியின் ஆசையை நிறைவேற்ற தானே ஒரு தயாரிப்பாளராக மாறுகிறார். இதையடுத்து மிருணாளினி பெரிய கதாநாயகியாக மாறினாரா, இல்லையா என்பதே படத்தின் மீதி கதை. விஜய் ஆண்டனி வழக்கம்போல் அமைதியான நடிப்பின் மூலம் கவர்கிறார். மிருணாளினி சிறப்பான நடிப்பைக் கொடுத்து கதாபாத்திரத்திற்கு உயிர் கொடுத்திருக்கிறார். பரத் தனசேகர் மற்றும் ரவி ராய்ஸ்டர் இசையில் பாடல்கள் வித்தியாசமான முயற்சியில் ரசிக்க வைத்திருக்கின்றன. மொத்தத்தில் ரோமியோ நல்ல என்டர்டைன்மென்ட் படமாக அமைந்திருக்கிறது.

## டியர் - விமர்சனம்



குறட்டை பிரச்சனையை மையமாக வைத்து வெளியான குட் நைட் திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், தற்போது அதே கதைக்கருவை வைத்துக் கொண்டு குடும்பத்திற்குள் நடக்கும் குழப்பங்களை நேர்த்தியாக எடுத்துச் சொல்லும் திரைப்படமாக வெளியாகி இருக்கிறது டியர். ஐஸ்வர்யா ராஜேஷுக்கு தூக்கத்தில் குறட்டை விடும் பழக்கம் இருக்கிறது. இதை மறைத்து ஜிவி பிரகாஷை மணம் முடித்து வைக்கின்றனர். இதனால் இருவருக்குள்ளும் பிளவு ஏற்படுகிறது. இந்தப் பிளவு நாளடைவில் விவாகரத்து வரை சென்றுவிட இதன் பிறகு இருவரும் விவாகரத்து பெற்றார்களா அல்லது மீண்டும் இணைந்தார்களா என்பதே இப்படத்தின் மீதி கதை. புதுமண தம்பதி வெறும் தூக்கத்திற்கு மட்டும் ஏன் இந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஜி.வி பிரகாஷ். அவருடைய தோற்றத்திலும் நடிப்பிலும் எந்த ஒரு மாற்றமும் இன்றி முந்தைய படங்களில் என்ன செய்தாரோ அதையே இந்த படத்திலும் செய்திருக்கிறார். ஜிவி பிரகாஷை விட ஐஸ்வர்யா ராஜேஷுக்கு வயது அதிகம் போல் தெரிகிறது. இதனாலேயே இருவருக்குமான கெமிஸ்ட்ரி சரியாக ஒர்க் அவுட் ஆகவில்லை. நாம் ஏற்கனவே பார்த்துப் பழகிய ஒரு வரிக் கதையை வைத்துக் கொண்டு 2.30 மணி நேரம் படத்தை ரசிக்க வைக்க முயற்சி செய்த இயக்குநர் டைட்டிலுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை சற்று திரைக்கதைக்கும் கொடுத்து இருந்தால் படம் வெற்றி பெற்று இருக்கும்.

## வங்காள விரிகுடா இசை வெளியீட்டு விழா




மாதா பிதா ஃபிலிம் பேக்டரி வழங்க, தமிழ் திரையுலகில் முதன்முறையாக, 21 கிராப்ட்களை கையாண்டு இப்படத்தை தயாரித்து இயக்கி நடித்திருக்கிறார் குகன் சக்வர்த்தியார். அப்துல் கலாமின் கனவு காணுங்கள் எனும் கருத்தை மையமாகக் கொண்டு உருவாகியுள்ளது இப்படம். இந்த படம் விரைவில் திரைக்கு வரவுள்ள நிலையில், இப்படத்தின் இசை மற்றும் டிரெய்லர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

விழாவில், குகன் சக்கரவர்த்தியார் பேசியதாவது... எம்ஜிஆர், ஜெயலலிதா கலைஞர், அண்ணா எல்லோரும் வாழும் இடம் வங்காள விரிகுடா. காசு உள்ளவன் எல்லாம் படமெடுத்து விட முடியாது, அறிவு வேண்டும். இந்த படம் அருமையான கதை, நல்ல பாடல்கள் என படம் நன்றாக வந்துள்ளது என்றார். 'வங்காள விரிகுடா குறுநில மன்னன்' இசைத் தட்டினை சிறப்பு விருந்தினர்கள் வெளியிட குகன் சக்வர்த்தியாரின் தாய் மற்றும் தந்தை பெற்றுக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியின் போது குகன் சக்வர்த்தியாரின் பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## மாற்றுத்திறனாளிகளை வைத்து படம் எடுப்பேன் - ராகவா லாரன்ஸ்



தமிழர்களின் பாரம்பரிய மல்லர் கம்பம் சாகச கலை நிகழ்வு , ராகவா லாரன்ஸ் "கை கொடுக்கும் கை" குழு சார்பில், சமீபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ராகவா லாரன்ஸ் பேசுகையில், 'மல்லர் கம்பம் என்ற கலையை நல்ல வலுவான உடல் உள்ளவர்கள் மட்டுமே செய்ய முடியும். இங்கு இவர்கள் செய்வதை பார்த்தால் பிரமிப்பாக இருக்கிறது. இவர்களுக்கு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான் இங்கு நிகழ்வு நடத்தப் படுகிறது என்றார்.

இவர்கள் வாடகை கட்டக் கூட கஷ்டப்படுகிறார்கள். அதனால் உங்கள் வீட்டு விழா, தெரிந்த நிகழ்ச்சிகளில் இவர்களுக்கு வாய்ப்பு வழங்குங்கள் என்று கேட்டுக் கொண்டார். அது மட்டுமில்லாமல் மாற்றுத்திறனாளிகளை வைத்து ஒரு படம் எடுக்கவுள்ளேன், அதன் மூலம் வரும் வருமானத்தில், இவர்களுக்கு வீடுகட்டி தரவுள்ளேன்.

நீங்களும் இவர்களுக்கு தொடர்ந்து வாய்ப்பளியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் நன்றி. இந்தக் கலையை கற்றுக்கொண்ட அனைவருக்கும் ராகவா லாரன்ஸ், ஸ்கூட்டி வழங்கினார்.

## திருக்குறள் படப்பிடிப்பு துவங்கியது



டாக்டர் கோ. விசுவநாதன் VIT வேந்தர் மற்றும் தலைவர் தமிழியக்கம் வழங்க T.P.ராஜேந்திரனுடன் இணைந்து ரமணா கம்யூனிகேஷன்ஸ் தற்போது திருக்குறளைத் திரைப்படமாகத் தயாரிக்கிறது. தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் இந்த படத்தின் படப்பிடிப்பு பூஜையுடன் துவங்கியது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தைய தமிழனின் வாழ்வியலைப் இத்திரைப்படத்தில் பதிவு செய்ய உள்ளனர்.

அன்றைய தமிழர்களின் பண்பாடு, தொழில், வணிகம் என வாழ்வியல் குறித்தும் இத்திரைப்படம் பேசவிருக்கிறது. திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் இத்திரைப்படத்தினை சப்-டைட்டிலோடு உலகெங்கும் திரையிடத் படப்புழ் திட்டமிட்டுள்ளது. காமராஜ் திரைப்படத்திற்கு திரைக்கதை, வசனமெழுதிய செம்பூர்.கே.ஜெயராஜ் இத்திரைப்படத்திற்கான திரைக்கதையை எழுத A.J.பாலகிருஷ்ணன் இயக்குகிறார்.

## ஹரா இசை வெளியீட்டு விழா



வெள்ளிவிழா நாயகன் மைக் மோகன் நீண்ட இடைவேளைக்குப் பிறகு, மீண்டும் நாயகனாக களமிறங்கும் திரைப்படம் 'ஹரா'. ஆக்ஷன் அதிரடிப் படமாக இப்படத்தை இயக்கியுள்ளார் விஜய் ஸ்ரீ ஜி. விரைவில் திரைக்கு வரவுள்ள இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில், நடிகர் மோகன் பேசியதாவது, என்னுடைய பாட்டுகள் பற்றி எல்லோரும் சொல்கிறார்கள் ஆனால் அதற்கு காரணம் இசைஞானி, நான் எப்போதும் மார்க்கெட்டைப் பற்றி யோசிக்கவே மாட்டேன், ஒரு படம் என்றால் அது எனக்குப் பிடிக்க வேண்டும் அவ்வளவு தான்.

நிகில் தான் விஜய் ஸ்ரீயை கூட்டி வந்தார், எனக்கு திரைக்கதையில் சில தயக்கங்கள் இருந்தது, அதை மனமுவந்து மாற்றினார். 7 முறை மாற்றி தான் இந்தப்படத்தை எடுத்துள்ளோம். இந்தப்படத்தில் முதலில் பாடல்கள் இல்லை ஆனால் மூன்று பாடல்கள் வைத்துவிட்டனர்., ராஜீவ் மேனனை கேமராமேனாக பார்த்திருக்கிறேன்.

இப்படத்தில் அவருடன் இணைந்து நடித்துள்ளேன். சிங்கம்புலி, அனுமோல் முதலாக இணைந்து நடித்த அனைவருக்கும் என் நன்றிகள் என்றார். ஹரா' திரைப்படத்தை கோயம்புத்தூர் எஸ் பி மோகன் ராஜ் மற்றும் ஜி மீடியா ஜெய ஸ்ரீ விஜய் தயாரித்துள்ளார்கள்.

## ராம்சரணுக்கு டாக்டர் பட்டம்




சென்னை, பல்லாவரத்தில் நடைபெற்ற விஸ்டாஸின் பதினான்காவது ஆண்டு பட்டமளிப்பு விழாவில், புகழ்பெற்ற இந்திய நடிகர், திரைப்பட தயாரிப்பாளர் மற்றும் தொழில்முனைவோரான ராம்சரணுக்கு கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்து அங்கீகரித்துள்ளது.

பல்லாவரம் விஸ்டாஸ் வளாகத்தில் உள்ள வேலன் அரங்கில் நடைபெற்ற விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்கள் கலந்து கொண்டனர்.

இளங்கலை பட்டதாரிகள், முதுகலை பட்டதாரிகள் மற்றும் பிஎச்டி உட்பட மொத்தம் 4555 பட்டதாரிகள் இந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டனர். பட்டமளிப்பு விழாவில் 80 தங்கப் பதக்கங்கள் மற்றும் 100 பி எச்.டி பட்டங்களை மாணவர்கள் பெற்றனர். கௌரவ டாக்டர் பட்டம் வழங்க ராம்சரண் கொனிடேலாவை தேர்ந்தெடுத்தது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த டாக்டர் ஐசரி கே. கணேஷ், அவரின் அபாரமான திறமையை குறிப்பிட்டு,

இன்னும் பெரிய மைல்கற்களை சினிமாவில் அவர் அடைவார் என நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

## வர்ஷங்களுக்கு சேஷம் படத்தில் கவனம் ஈர்த்த நிவின் பாலி



நிவின் பாலி, பிரணவ் மோகன்லால் மற்றும் தியான் ஸ்ரீனிவாசன் நடிப்பில் வினித் ஸ்ரீனிவாசன் இயக்கத்தில் குடும்ப பொழுதுபோக்கு திரைப்படமாக உருவான 'வர்ஷங்களுக்கு சேஷம்' சமீபத்தில் வெளியானது. இப்படத்தில் நிவின் பாலியின் தனித்துவமான நடிப்பு.. கவனத்தை கவர்கிறது. அவரது திரை தோற்றம்... அவர் ஆற்றல்மிக்க நடிகர் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. சினிமா ரசிகர்களின் மையமாக திகழும் கோடம்பாக்கம்.. பல திரைப்பட தயாரிப்பாளர்களின் வெற்றியையும், புகழையும், தோல்விகளையும் கண்டது. இந்த நகரம்தான் படத்தின் கதைக்கள பின்னணி. நிவின் பாலியின் அட்டகாசமான நடிப்புக்கு கூடுதலாக 'வர்ஷங்களுக்கு சேஷம்' வலிமையான மற்றும் அழுத்தமான கதைகளத்தையும், திறமையான சக நட்சத்திரங்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனால் அவர்கள் ஒரு ஹைடெக்கான சினிமா அனுபவத்தையும் வழங்குகிறார்கள். மேலும் இந்த திரைப்படத்தில் அவர் ஏற்றிருக்கும் கதாபாத்திரம்.. ரசிகர்களிடத்தில் நீண்ட காலத்திற்கு ஒரு பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும்



● பாராளுமன்ற தேர்தல் இன்று நடைபெறுவதை முன்னிட்டு விருதுநகர் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பயன்படுத்தப்பட உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு இயந்திரங்கள், வாக்குப்பதிவு சரிபார்க்கும் இயந்திரங்கள்,வாக்குப்பதிவுபணிகளுக்கானஉபகரணங்கள் விருதுநகர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மையங்களுக்கு அனுப்பப்பட்டு வரும் பணிகளை கலெக்டர் ஜெயசீலன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



● மக்களவை தேர்தலை முன்னிட்டு விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் சட்டமன்ற தொகுதி வாக்குச் சாவடிகளுக்கு, துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்கள் திருமங்கலம் தாலுகா அலுவலகத்திலிருந்து வாகனங்களில் அனுப்பி வைக்கப்பட்டது.

## ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை கல்லூரியில் விளக்கேற்றும் விழா



**ஒட்டன்சத்திரம் .ஏப். 19.**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விளக்கேற்றும் விழா கல்லூரியின் தாளாளர் மருத்துவர் வேம்பணன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் கல்லூரியின் ஆலோசகர் குப்புசாமி, பழனி தண்டாயுதபாணி கோவிலின் இணை ஆணையாளர் மாரிமுத்து சிறப்புரையாற்றினர் விழாவினை தமிழ்த்துறை தலைவர் பாவை ஒருங்கிணைப்பு செய்திருந்தார்.

## அம்பேத்கரின் பிறந்தநாளை முன்னிட்டு கப்பலூர் ஹெச்.பி கேஸ் பிளாண்ட்டில் ரத்த தான முகாம்



**திருமங்கலம்.ஏப்.19.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் கப்பலூரில் அமைந்துள்ள ஹெச்.பி .,எல்பிஜி கேஸ் பிளாண்ட்டில் டாக்டர் அம்பேத்கர் மற்றும் மகாத்மா ஜோதிபா பூலே பிறந்தநாளை முன்னிட்டு லாரி டிரைவர்கள் நிறுவன ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தனர்.

டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் மற்றும் தலை சிறந்த சமூக சீர்திருத்தவாதியான மகாத்மா ஜோதிபா பூலே-வின் பிறந்தநாளை முன்னிட்டு கப்பலூர் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் எல்பிஜி கேஸ் பிளாண்ட்டில் மனித வள மேம்பாட்டு பொது மேலாளர் நடராஜன் வழிகாட்டுதலின்படி ஓபி சி அசோசியேசன் தலைவர் சேது முத்துராமலிங்கம் ரத்ததானம் வழங்கி ரத்ததான முகாமை தொடங்கி வைத்தார். இதில் எஸ்சி எஸ்டி அசோசியேசன் தலைவர் கண்ணன், தனசேகரன் முன்னிலை வகித்தார். இந்த ரத்ததான முகாமில் லாரி டிரைவர்கள் ஊழியர்கள் அதிகாரிகள் என நூற்றுக்கு மேற்பட்டோர் ஆர்வமுடன் கலந்து கொண்டு ரத்ததானம் வழங்கினர்.இந்த ரத்ததான முகாமிற்கான ஏற்பாட்டினை ஓபிசி அசோசியேசன் செயலாளர் ஜெய் பிரகாஷ் செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் மதுரை எல்பிஜி பிளான்ட் மேலாளர் கிறிஸ்டய்யா அதிகாரிகள் அர்ஜுன் பாபு, ராஜ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.மதுரை வாலண்ட்ரி ரத்த சேமிப்பு வங்கி மூலம் மருத்துவர்கள் இப்பணியினை மேற்கொண்டனர்.

## சேற்று வாசனை படம் மிக உயரிய விருதுக்கு தேர்வு




சேற்று வாசனை என்ற சினிமா கத்தார்நாட்டில் வசிக்கும் மலையாளத்தை தாய்மொழியாக கொண்ட பிரஜித் ராமகிருஷ்ணன் டைரக்டில் எடுக்கபட்ட சேற்றுவாசனை தமிழ் படம் இந்திய சினிமாதுறையின் மிக உயரிய விருதுக்கு தேர்வு இதில் சேற்று வாசனை என்ற தமிழ் படம் அர்ஜித் கிரியேஷன்ஸ் பெண் அண்ட் பேப்பர் கிரியேஷன்ஸ் இணைந்து தயாரிக்கப்பட்ட படம் அஸ்வின் கே குமார். கதாநாயகியாக ஆரத்திபிரிஜித் நடித்து உருவான தமிழ் திரைபடம் இதில் இரண்டாம் கதாநாயக சிபிதாஸ் நடித்துள்ளார்இசையமைப்பு நெகில்ஜிம்மி. பாடலாசிரியர் ஆரத்தி பிரஜித். இத்திரைப்படம் கேரளாவில் மற்றும் தமிழகத்திலும் எடுக்கப்பட்டது உலகமெங்கும் உள்ள திரையரங்குகளும் விரைவில் வெளிவர உள்ளது இத்தமிழ் திரைபடம் இந்திய சினிமாதுறையின் உயரிய விருதான தாதா சாஹேப் பால்கே திரைபட விருதுக்கு தேர்வாகியுள்ளது என்பது குறிப்பிடதக்கது

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## சர்வதேச ஜூடோ போட்டியில் பங்கேற்கவுள்ள கல்லூரி மாணவிக்கு திருமங்கலம் இலக்கியப் பேரவை நிதியுதவி



**திருமங்கலம், ஏப். 19-**

நேபாளத்தில் நடைபெறவுள்ள சர்வதேச அளவிலான ஜூடோ போட்டியில் பங்கேற்கவுள்ள கல்லூரி மாணவிக்கு திருமங்கலம் இலக்கியப் பேரவையின் சார்பில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் சோழவந்தான் சாலையில் தனது பெற்றோருடன் வசித்து வருபவர் செல்வமணி.இவர் திருமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் டூ படித்து முடித்து விட்டு தற்போது மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்து வருகிறார்.இவர் ஜூடோ மற்றும் யோகா போட்டியில் மாநில மற்றும் தேசிய அளவில் முதலிடம், இரண்டாமிடம் பெற்று தற்போது நேபாளத்தில் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான ஜூடோ போட்டியில் கலந்து கொள்ள தேர்வாகி இருக்கிறார்.எளிய குடும்பத்தைச் சேர்ந்த இவர் நேபாளத்தில் பல்வேறு நாடுகள் பங்கேற்கும் சர்வதேச அளவிலான ஜூடோ போட்டியில் கலந்து கொள்வதற்கு நுழைவுக் கட்டணம் மற்றும் மற்றும் ஜூடோ டிரஸ் ஆகியவற்றிற்கு சுமார் ரூ.40,000 தேவைப்படுகிறது.

இதனையறிந்த திருமங்கலம் இலக்கியப் பேரவையின் சார்பில் உதவி செய்திட திட்டமிடப்பட்டது. இதையடுத்து திருமங்கலம் இலக்கியப் பேரவையின் செயலாளர் சு.சங்கரன் தலைமையில் புரவலர்கள் மற்றும் ஆர்வலர்கள் இணைந்து நிதி சேகரிப்பு செய்து சர்வதேச ஜூடோ போட்டியில் பங்கேற்கவுள்ள மாணவி செல்வமணியை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து நிதி வழங்கியதுடன் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வினில் இலக்கிய பேரவை பொருளாளர் தமிழ்செல்வன், செயற்குழு உறுப்பினர் பழனிராஜ், ஆசிரியை ரோகா மற்றும் சமூக ஆர்வலர்கள் காளீஸ், ராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## முதியவர் தற்கொலை

**நத்தம், ஏப். 19**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே சிறுகுடி-ஒடுகம்பட்டியை சேர்ந்தவர் சின்னபொட்டு (60) இவர் கடந்த சில மாதங்களாக மூட்டு வலியால் அவதிப்பட்டு வந்தார். இதனால் மன உளைச்சலில் இருந்த முதியவர் கடந்த 13-ம் தேதி விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றார். ஆபத்தான நிலையில் அக்கம் பக்கத்தினர் மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனில்லாமல் சின்னப்பொட்டு நேற்று இறந்து விட்டார். மேலும் இச்சம்பவம் குறித்து சப்-இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார்.

## கமுதியில் இயற்கை விவசாயம் குறித்த கருத்தரங்கு



**கமுதி, ஏப்.19-**

கமுதி அருகே மதுரை வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பில் செவ்வாய்க்கிழமை விவசாயிகளுக்கான இயற்கை விவசாயம் குறித்த கருத்தரங்கு நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே தவசிக்குறிச்சி, கடம்பன்குளம் உள்ளிட்ட கிராமங்களில் மதுரை அரசு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் தங்கி விவசாயிகளுடன் நேரில் கலந்துரையாடி வேளாண்மை சார்ந்த கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக வேளாண் கல்லூரி மாணவர்கள் ஜெயகிருஷ்ணன்,கோகுல்ராஜ், வாசு, விஷ்ணு அரவிந்த், தினேஷ், சிவபாலன், அஜய் ரோஷன், தனுஷ், சூரஜ் ஆகிய மாணவர்கள் அக்கிராமங்களில் இயற்கை முறை விவசாயம் குறித்தும், மதிப்புக்கூட்டி விற்பனை செய்தல், அதிக லாபம் ஈட்டுதல், இயற்கை உரங்களை பயனபடுத்துதல் குறித்து கருத்தரங்கம் நடத்தினர். இந்த கருத்தரங்கில் 50 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு இயற்கை விவசாயம் குறித்த தங்களது சந்தேகங்களை கேட்டறிந்து பயன்பெற்றனர்.

## போலீசாருக்கு ஏசி ஹெல்மெட்

**காந்திநகர், ஏப். 19-**

குஜராத் மாநிலம் வதோதராவில் கோடை வெயிலை சமாளிக்க போக்குவரத்து போலீசாருக்கு ஏ.சி.ஹெல்மெட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதை அணிவதன் மூலம் அவர்கள் வெயிலின் தாக்கத்தில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள முடியும். இந்த ஹெல்மெட்டை அணிந்து போக்குவரத்து போலீசார் பணியாற்றி வரும் காட்சிகள் வலைதளங்களில் பரவி வருகிறது. அங்குள்ள ஐ.ஐ.எம். மாணவர்கள் உருவாக்கி கொடுத்துள்ள இந்த வித்தியாசமான ஹெல்மெட் பேட்டரியில் இயங்க கூடியது.

## கமுதியில் தீ தொண்டு நாள் வாரம் அனுசரிப்பு



**கமுதி, ஏப். 19 -**

இராமநாதபுரம் மாவட்டம் கமுதி தீயணைப்பு நிலையம் சார்பில் தீ தொண்டு வார விழா நடைபெற்றது.

தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை சார்பில் கமுதி தீயணைப்பு நிலைய அலுவலர் சந்திரசேகர் தலைமையில் தீ தொண்டு நாள் வாரவிழாவை முன்னிட்டு பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

1944 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலகட்டத்தில் பம்பாய் விக்டோரியா டோக் துறைமுகத்தில் இருந்து சுமார் 7000 டன் வெடி பொருட்களுடன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எஸ்.எஸ் ஸ்போர்ட்ஸ்டிகைன் என்ற கப்பலிருந்து மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டது அந்த தீயை அணைக்கச்சென்ற போது கப்பலில் இருந்த 700 டன் வெடிபொருள் வெடித்து சிதறியதில் மீட்பு பணியில் இருந்த சுமார் 66 தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள். மேலும் 336 நபர்கள் தீக்காயங்களுடன் உயிர்தப்பினர் கொடூரமான நிகழ்வை அனைவரும் நினைவு கூறும் வகையில் 1968 ஆம் முதல் இந்தியா முழுவதும் ஏப்ரல் 14ஆம் தேதி தேசிய தீ தொண்டு நாள் அனுசரிக்க மத்தியரசு அனுமதி அளித்தது. தமிழகத்தில் 1951 ஆண்டு முதல் இன்று வரை 33 வீரர்கள் தீ விபத்து மற்றும் மீட்பு பணிகளின் போது தங்கள் உயிரை நீர்த்துள்ளார்கள் அவர்களின் நினைவை போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14ஆம் தேதி முதல் ஒரு வார காலத்திற்கு தீ தொண்டு நாள் வாரம் கொண்டாட படுகிறது. பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்கள்,பேருந்து நிலையம், பள்ளிக்கூடம், கோயில்கள், கல்லூரிகள், வாரச்சந்தை வளாகம், ஆகிய இடங்களில் பொதுமக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு பிரசுரங்களை வழங்கப்பட்டது. தீயணைப்பு படை வீரர்கள் முக்கியத்துவம் பற்றியும் பேசப்பட்டது. தீயணைப்பு நிலையத்தின் வீரர்கள், பொதுமக்கள், வியாபாரிகள், சமூக ஆர்வலர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

## துபாய் உணவு திருவிழா அதன் 11-வது பதிப்பிற்கான காஸ்ட்ரோனமிக் நிகழ்வுகள் இந்த வாரம் தொடங்குகிறது

**சென்னை, ஏப் 19-**

11வது துபாய் உணவுத் திருவிழா (டி. எஃப். எஃப்) சுவை மொட்டுகளைத் தூண்டுவதாகவும், தட்டுகளில் மிகத் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றையும் கூட மகிழ்விக்கும் என்றும் உறுதியளிக்கிறது. ஏப்ரல் 19 வெள்ளிக்கிழமை முதல் மே 12 ஞாயிற்றுக்கிழமை வரை இயங்கும், டி. எஃப். எஃப் 2024 நகரம் முழுவதும் சமையல் அனுபவங்கள், சிறப்பு மெனுக்கள், நிகழ்வுகள் மற்றும் பலவற்றுடன் நகரத்தின் மாறும் உணவுக் காட்சியின் இனிமையான காட்சிக்கு உறுதியளிக்கிறது.

இது குறித்து துபாய் திருவிழாக்கள் மற்றும் சில்லறை ஸ்தாபனத்தின் (டி. எஃப். ஆர். இ) தலைமை நிர்வாக அதிகாரி அகமது அல் காஜா கூறுகையில், துபாய் உணவு விழாவின் 11 வது பதிப்பு துபாயின் காஸ்ட்ரோனமி காட்சியின் சிறந்த பிரசாதங்களை மலிவு விலையில் வழங்கும்.அதே நேரத்தில் நகரத்தின் சிறந்த சமையல் திறமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டும். கடந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டும், உலகளாவிய சமையல் இடமாக துபாய் நிலைப்பாட்டை நாங்கள் தொடர்ந்து வலுப்படுத்துகிறோம், சுவை மொட்டுகளை கவர்ந்திழுக்கிறோம் மற்றும் உலகளவில் பாராட்டைப் பெறுகிறோம் என்று கூறினார்.

## அபுதாபியில் IIFA உற்சவம்: இந்திய நட்சத்திரங்களை சந்திக்க தயாராகுங்கள்

**சென்னை, ஏப் 19-**

ஷேக் நஹாயான் மபாரக் அல் நஹ்யானின் (சகிப்புத் தன்மை மற்றும் சகவாழ்வு அமைச்சர்) கௌரவமான ஆதரவின் கீழ், IIFA உத்சவம் 2024 பிரம்மாண்டமான இரண்டு நாட்களுக்கான கொண்டாட்ட நிகழ்வாக நடைபெற இருக்கிறது. பன்முக தென்னிந்திய சினிமா நட்சத்திர பிரபலங்களை காணலாம். தெலுங்கு மற்றும் கன்னட திரைப்பட பிரிவுக்கான IIFA உற்சவம் 2024 இன் தொகுப்பாளர்களாக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளர்கள் யாரென்றால், தெலுங்கு சினிமாவுக்கு தொகுப்பாளராக ரானா டகுபதியும், கன்னடதிரையுரல பிரிவுக்கான தொகுப்பாளராக விஜய் ராகவேந்திரா மற்றும் அகுல் பாலாஜி இருவரும் நிகழ்ச்சியை வழங்குகின்றனர். இதுகுறித்து ராக்ஸ்டார் டிஎஸ்பி கூறியதாவது: தென்னிந்திய சினிமாவின் சாதனைகளை உலக அரங்கில் வெளிப்படுத்தி, பொழுதுபோக்கு துறையில் அதன் இருப்பையும் தாக்கத்தையும் மேலும் உறுதிப்படுத்தும் வகையில், அபுதாபியில் உள்ள யாஸ் தீவில் IIFA உற்சவத்தின் இரண்டு நாள் களியாட்ட நிகழ்ச்சியை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன் என்றார். அபுதாபியின் குறிப்பிடத்தக்க நகரமான யாஸ் தீவில் IIFA உற்சவம் உலகளாவிய சுற்றுப்பயணத்திற்கான டிக்கெட்டுகள் மக்களுக்காக விற்பனைக்கு வந்துள்ளன. டிக்கெட்டுகளைப் பெற https://www.etihadarena.ae/en/event-booking/iifa-utsavam மற்றும் https://abu-dhabi.platinumlist.net/event-tickets/91813/iifa-utsavam-2024-at-etihad-arena-abu-dhabi க்ளிக்கவும்.

## கோடைக்கால வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் கிராம்ப்டன் நிறுவனம்

**கோவை, ஏப் 19-**

வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் பிரிவில் தரத்திற்கும் முன்னோடித்துவப் புத்தாக்கங்களுக்கும் உறுதிப்பாடு மேற்கொண்டுள்ள கிராம்ப்டன் கிரீவ்ஸ் கன்ஸ்யூமர் எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட், உங்கள் வாழ்விடங்களை நுட்பமான மற்றும் இணையற்ற அழகியலுடன் தொடர்ந்து மறுவரையறை செய்து வருகிறது. இந்தச் சமீபத்திய புத்தாக்கம் குறித்து, கிராம்ப்டன் கிரீவ்ஸ் கன்ஸ்யூமர் எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட்டின் வணிகத் தலைவர் (பெரிய அளவிலான வீட்டு உபயோகப் பொருட்கள்), மல்ஹர் வாட்கே, “ இந்த பாரம்பரியத்தைத் தொரடும் என்று நாங்கள் நம்புகிறோம், மேலும் வசதியான மற்றும் சொகுசான நுகர்வோர் அனுபவத்திற்காக எங்கள் தயாரிப்புகளில் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் அதே உயர் பயன்களை வழங்கும்” என்று கூறினார். முழுமையாக மடிக்கக் கூடிய லூவர்கள், எவர்லாஸ்ட் பம்ப் மற்றும் ஆட்டோ-ஃபில் செயல்பாடு ஆகியவற்றுடன், இது உகந்த மற்றும் நிலையான செயல்திறனுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. அதன் ஒத்தபகுதியைப் போலவே, இது இன்வெர்ட்டர் இணக்கமானது மற்றும் மேம்பட்ட இயக்கத்திற்காக கனரக காஸ்டர் சக்கரங்களுடன் பொருத்தப்பட்டுள்ளது.

Printed Published and Owned
by **S.Manimaran,**
Printed at Manimaran
Printers at **9**, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
**RNI Regn. No.61494 / 94**

## தேர்தல் வாகனங்களில் ஜி.பி.எஸ்.

**மதுரை, ஏப். 19-**

ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களில் ஜி.பி.எஸ்., கருவி பொருத்தப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 13 லட்சத்து 21 ஆயிரத்து 795 பெண் வாக்காளர்கள், 13 லட்சத்து 67 ஆயிரத்து 51 ஆண் வாக்காளர்கள், 271 திருநங்கையர், 5 ஆயிரத்து 468 ராணுவ வீரர்கள் என மொத்தம் 26 லட்சத்து 94 ஆயிரத்து 585 பேர் வாக்காளர்கள் உள்ளனர். இவர்கள் ஓட்டளிக்க 1160 மையங்களில் 2751 ஓட்டுச்சாவடிகள், 2727 தேர்தல் ஓட்டுச்சாவடி அலுவலர்கள் தயார்படுத்தப்பட்டுள்ளனர்.

ஓட்டுச்சாவடிகளுக்கு மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரம், பயன்படுத்தும் காகிதங்கள் என ஸ்டேஷனரி பொருட்களைக் கொண்டு செல்ல ஒரு வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஜி.பி.எஸ்., கருவி பொருத்தப்பட்டு, துப்பாக்கி போலீஸ் பாதுகாப்புடன் செல்லும். ஓட்டுப்பதிவு முடிந்த பின் அவற்றை பாதுகாப்பாக ஓட்டு எண்ணும் இடமான மதுரை அரசு மருத்துவக் கல்லூரிக்கு கொண்டு சென்று ஒப்படைப்பது மண்டல அலுவலர்களின் பணி. இதற்காக 259 பேர் நியமிக்கப்பட்டு அவர்களின் வாகனங்களிலும் ஜி.பி.எஸ்., கருவி பொருத்தப்பட்டது.

## மருத்துவர்கள் இன்று தயார் நிலையில் இருக்க வேண்டும்
### பொது சுகாதாரத்துறை உத்தரவு

**சென்னை, ஏப். 19-**

மருத்துவர்கள் இன்று தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று பொது சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகம்-புதுச்சேரியில் உள்ள 40 பாராளுமன்ற தொகுதிகளிலும் இன்று மக்களவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதையொட்டி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் வாக்குச்சாவடிகள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. வாக்குச்சாவடியில் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக தண்ணீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்துவைக்க வேண்டுமென ஏற்கெனவே அறுவுறுத்தப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், தமிழகம் முழுவதும் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என பொது சுகாதாரத் துறை உத்தரவிட்டு உள்ளது. இன்று வாக்களிக்க வரும் முதியவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வெப்ப அலை காரணமாக அசௌகரியங்கள் ஏற்படக்கூடும் என்பதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தனியார் நிதிநிறுவன ஊழியரை தாக்கி வழிப்பறி

**மயிலாடுதுறை, ஏப். 19-**

மயிலாடுதுறை அருகே தனியார் சிட்பண்ட் ஊழியரை தாக்கி வழிப்பறியில் ஈடுபட்ட மூவரை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

மயிலாடுதுறை அருகே சேந்தங்குடி வடபாதி தெருவை சேர்ந்தவர் பூராசாமி மகன் ஜெகன்நாதன் (வயது 46). இவர் மயிலாடுதுறையில் உள்ள தனியார் சிட்பண்ட் ஒன்றில் வசூல் செய்யும் வேலை பார்த்து வருகிறார். இந்த நிலையில், இவர் ஆனதாண்டவபுரம் சாலையில் இருசக்கர வாகனத்தில் வசூலுக்காக சென்றுள்ளார். செல்லும் வழியில் அவரின் வாகனம் பஞ்சர் ஆனதால் அவ்வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த இளைஞரிடம் லிப்ட் கேட்டு அவருடன் மயிலாடுதுறை நோக்கி சென்றுள்ளார்.

கழுக்கானிமுட்டம் அருகே சென்ற போது மர்மநபர்கள் 2 பேர் இருசக்கரவாகனத்தை வழி மறித்து நிறுத்தியுள்ளனர். தொடர்ந்து லிப்ட் கொடுத்த இருசக்கர வாகன ஓட்டுநர், மற்றும் மர்ம நபர்கள் சேர்ந்து ஜெகநாதனை அடித்து தாக்கியதோடு அவரிடம் இருந்த செல்போன் மற்றும் ஆயிரம் ரூபாய் பணத்தை பறித்துக் கொண்டு ஜெகன்நாதனை விரட்டி அடித்துள்ளனர்.

போலீசார் நடத்திய விசாரணையில், மயிலாடுதுறை அருகே மங்கைநல்லூர் கழனி வாசல் பிள்ளையார் கோயில் தெருவை சேர்ந்த கலியமூர்த்தி மகன் வரதராஜன் (18), மயிலாடுதுறை கழுக்காணிமுட்டம் ஈவேரா தெருவை சேர்ந்த பாஸ்கர் மகன் சுபாஷ் (18), மற்றும் 15 வயது சிறுவன் ஆகிய மூவரும் இந்த வழிபறியில் ஈடுபட்டது தெரியவந்தது.

## மழை, வெள்ள பாதிப்பு:
## துபாய் இந்தியர்களுக்கு உதவி எண்கள் அறிவிப்பு

**துபாய், ஏப். 19-**

துபாயில் பெய்த வரலாறு காணாத கனமழையால், அங்கு வசிக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள இந்தியர்களுக்கு உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

துபாயில் வரலாறு காணாத கனமழை பெய்து உள்ளது. இதனால், பல இடங்களில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு உள்ளிட்டவை ஏற்பட்டு உள்ளது. வீடுகள், குடியிருப்புகளை வெள்ள நீர் சூழ்ந்தது. கனமழையால் சாலை போக்குவரத்து துண்டிக்கப்பட்டதுடன், விமான சேவையும் பாதிப்படைந்தது.

வாகனங்கள் வழியிலேயே நீரில் மூழ்கின. கார், லாரி உள்ளிட்ட சிறிய பெரிய வாகனங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட காட்சிகளும் வீடியோவாக வெளிவந்தன. பல்வேறு வீடுகளின் மேற்கூரைகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வழியே நீர் உள்ளே புகுந்தது. மழை காரணமாக துபாயில் வசிக்கும் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட துபாயில் வசிக்கும் இந்தியர்களுக்கு உதவி எண்கள் அறிவிக்கப்பட்டு உள்ளது. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட துபாயில் வசிக்கும் இந்தியர்கள், +971501205172, +971569950590, +971507347676, +971585754213 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளுமாறு இந்திய தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. அத்துடன், அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்க ஐக்கிய அரபு அமீரக அரசுடன் இந்திய தூதரகம் தொடர்பில் உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

## மதுரையில் பூஜை செய்து வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்கள்

**மதுரை, ஏப். 19-**

மதுரையில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 பாராளுமன்ற தொகுதிகளுக்கும் இன்று ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளிலும் மொத்தம் 950 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். நேற்று முன்தினத்துடன் பிரசாரம் முடிவடைந்த நிலையில் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 10 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. இதில், மதுரை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்டு மதுரை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மத்தி, மேலூர் என 6 தொகுதிகள் உள்ளன. தேனி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்டு சோழவந்தான் (தனி), உசிலம்பட்டி ஆகிய 2 சட்டமன்ற தொகுதிகள், விருதுநகர் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்டு திருப்பரங்குன்றம், திருமங்கலம் ஆகிய 2 சட்டமன்ற தொகுதிகளும் உள்ளன.

மதுரை பாராளுமன்ற தொகுதியில் 21 வேட்பாளர்கள், தேனி பாராளுமன்ற தொகுதியில் 25 வேட்பாளர்கள், விருதுநகர் பாராளுமன்ற தொகுதியில் 27 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஒரு வாக்குப்பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களின் சின்னம் மற்றும் பெயர் மட்டுமே பொருத்த முடியும். அதன்படி, மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் 2 மின்னணு வாக்குச் செலுத்தும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

மதுரை மாவட்ட அளவில் 13,21,795 ஆண் வாக்காளர்களும், 13,67,05 பெண் வாக்காளர்களும், 271 மூன்றாம் பாலினத்தார் என மொத்தமாக 26,94,585 வாக்காளர்கள் உள்ளனர். பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவிற்காக மதுரை மாவட்டத்தில் 2,751 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை பாராளுமன்ற தொகுதியில் மட்டும் 1,573 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. மாவட்டத்தில் 3,303 வாக்குச் செலுத்தும் இயந்திரங்கள், 3,303 வாக்குப் பதிவு இயந்திரங்கள் 3,574 வாக்காளர் சரிபார்ப்பு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகிறது.

தேர்தல் பணிக்காக மாவட்டத்தில் 459 மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மதுரை மாவட்டத்தில் 13,204 வாக்குச்சாவடி அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபட உள்ளனர். முந்தைய தேர்தல்களில் மிகக் குறைந்த வாக்குப்பதிவு, மிக அதிக வாக்குப்பதிவு, அசம்பாவிதங்கள் போன்ற பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு 359 இடங்களில் உள்ள வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டுள்ளன.

இம்மையங்களில் தேர்தல் நுண் பார்வையாளர்கள், வெப் காஸ்டிங் முறை ஆகியவை மூலம் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மதுரை மாவட்டத்தில் 1,788 வாக்குச்சாவடி மையங்கள் வெப் காஸ்டிங் முறையில் கண்காணிக்கப் பட உள்ளன. மத்திய அரசு நிறுவனங்கள், வங்கிகளில் பணிபுரியும் 428 அலுவலர்கள் தேர்தல் நுண்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தேர்தல் நடவடிக்கைகளில் நுண் பார்வையாளர்களின் பணி மிகவும் முக்கியமானதாகும். இப்பணியாளர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு தொடங்கி முடியும் வரை தொடர்ந்து கண்காணித்து அதன் அறிக்கையை தேர்தல் பார்வையாளருக்கு தெரிவிக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் அறிவுறுத்தியுள்ளார்.

மதுரை மாநகர் மற்றும் மாவட்ட காவல்துறை சார்பில் 7500 காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். இந்நிலையில் உதவி தேர்தல் அலுவலர் கட்டுப்பாட்டில் உள்ள வாக்குப் பதிவு இயந்திரங்கள் துப்பாக்கி ஏந்திய காவல்துறை பாதுகாப்புடன் வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பும் பணி நடைபெற்றது. மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2 இல் இருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்குப்பதிவு தளவாடங்கள், சக்கர நாற்காலிகள் உள்ளிட்டவை வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது,

முன்னதாக வளாகத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தில் சிறப்பு பூஜை செய்யப்பட்டன. பின்னர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறை முன்பாகவும் பூஜை செய்து வழிபாடு நடத்தி மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

## விருதுநகரில் தி.மு.க. கிளை செயலாளர் குத்திக்கொலை

**விருதுநகர், ஏப். 19-**

விருதுநகரில் தி.மு.க. கிளை செயலாளர் குத்திக் கொல்லப்பட்டார்.

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை ஒன்றியம் தாயில்பட்டி அருகே உள்ள சத்திரப்பட்டியை சேர்ந்தவர் தவிட்டுராஜ் (வயது 60). தி.மு.க. கிளை செயலாளராகவும், நிலத்தரகராகவும் இருந்தார். இவர் சிவகாசி செல்லும் மெயின் ரோடு மண்குண்டாம்பட்டி டீக்கடையில் நேற்று முன் தினம் பகல் 11 மணிக்கு டீ குடித்துக்கொண்டிருந்தார்.

அப்போது ஒரு கும்பல் அங்கு வந்தது. இதைப் பார்த்து அவர் சுதாரித்து தப்புவதற்குள் அந்த கும்பலை சேர்ந்தவர்கள் அவரை சுற்றி வளைத்தனர். கண் இமைக்கும் நேரத்தில் கத்தியால் சரமாரியாக குத்தினர். இதில் ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே தவிட்டுராஜ் பரிதாபமாக இறந்தார். இதுகுறித்து வெம்பக்கோட்டை போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வெம்பக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் சங்கர் மற்றும் போலீசார் விரைந்து வந்தனர். தவிட்டுராஜ் உடலை பரிசோதனைக்காக சிவகாசி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்.

சாத்தூர் துணை போலீஸ் சூப்பிரண்டு சுரேஷ்குமார் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டார். தவிட்டுராஜை எதற்காக கொலை செய்தனர்? முன்பகையா அல்லது வேறு எதுவும் காரணமா? என பல்வேறு கோணங்களில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சப்-இன்ஸ்பெக்டர் லவகுசன் தலைமையில் தனிப்படை அமைத்து, கொலையாளிகளை போலீசார் தேடி வருகின்றனர்.

### பரமக்குடியில் சித்திரை திருவிழா

## 23-ம் தேதி அதிகாலையில் வைகை ஆற்றில் இறங்குகிறார் கள்ளழகர்



**பரமக்குடி ஏப் 19**

பரமக்குடி சுந்தரராஜப் பெருமாள் கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு ஏப்ரல் 23 ம் தேதி அதிகாலையில் புஷ்பப் பல்லக்கில் கள்ளழகர் கோலத்தில் வைகை ஆற்றில் இறங்குகிறார்.

பரமக்குடி சௌராஷ்டிர பிராமண மகா ஜனங்களால் நடத்தப்படும் சுந்தரராஜ பெருமாள் கோயில் சித்திரைத் திருவிழா நேற்று காப்பு கட்டுதலுடன் துவங்கியது. மே 19,20,21 ஆகிய நாட்களில் காலை, மாலையில் யாக சாலை பூஜைகள் நடைபெறுகிறது.இரவு பெருமாள் புறப்பாடு நடைபெறும்.சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான சுந்தரராஜ பெருமாள் புஷ்ப பல்லக்கில் கள்ளழகர் திருக்கோலத்தில் வரும் 23 ம் தேதி அதிகாலை 2.00 மணி அளவில் வைகை ஆற்றில் இறங்குகிறார்.

அதனைத் தொடர்ந்து அன்று காலை 8.45 மணி அளவில் அழகர் குதிரை வாகனத்தில் அலங்காரமாகி பக்தர்களால் மஞ்சள் நீர் பீச்சாங்குழல் துருத்தி மூலம் தண்ணீர் பீச்சி அடித்து தல்லாகுளம் மண்டகப்படியில் எழுந்தருள்கிறார்.அன்று இரவு ஆயிரம் பொன் சப்பரத்தில் காக்கா தோப்பு திருக்கண் மண்டபத்தில் கோவிலுக்கு வருகிறார்.24-ம் தேதி மண்டகப்படியில் கருடவாகனத்தில் எழுந்தருளி தசாவதார சேவை நடைபெறும்.தொடர்ந்து பல்வேறு திருகோலத்தில் மண்டகப்படிகளில் கள்ளழகர் எழுந்தருளிகிறார்.

27-ம் தேதி கள்ளழகர் சுந்தரராஜப் பெருமாள் கோவிலுக்கு வந்தடைகிறார். அன்றிரவு கண்ணாடி சேவை நடைபெறுகிறது.இத்திருவிழாவை காண பரமக்குடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்ளும் இத்திருவிழாவில் பரமக்குடி காவல் துணை கண்காணிப்பாளர் சபரிநாதன் தலைமையில் ஆயிரக்கணக்கான காவல்துறையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

இத்திருவிழா ஏற்பாடுகளை சுந்தரராஜ பெருமாள் கோயில் மேனேஜிங் டிரஸ்டி ரெங்காச்சாரி தலைமையில் நீலகண்டன், ரமேஷ்பாபு,கிரிதரன் கோவிந்தன் ஆகிய டிரஸ்டிகள் செய்து வருகின்றனர்.

### நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து

## வாக்கு சாவடிகளுக்கு 27 வாகனங்களில் கொண்டு செல்லப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள்



**வத்தலகுண்டு ஏப்19**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 270 வாக்குச்சாவடிகளுக்கு 27 வாகனங்களில் வாக்கு பதிவு செய்யும் மிஷின்கள் கொண்டு செல்லப்பட்டது இந்நிகழ்ச்சியில் நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த வாக்கு பதிவு செய்யும் இயந்திரம் மற்றும் இபிஎம் மிஷின்கள் வைக்கப்பட்ட அறையை அரசியல் கட்சியினர் மற்றும் அரசு அதிகாரிகள் முன்னிலையில் திறக்கப்பட்டது.

பின்பு அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் முன்னிலையில் வாக்குச்சாவடிகளுக்கு மிஷின்கள் மற்றும் வாக்குச்சாவடிகளுக்கு பயன்படுத்தப்படும் தளவாடப் பொருள்களை பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்நிகழ்ச்சி நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி மாரி தலைமையில் கூடுதல் தேர்தல் நடத்தும் அதிகாரியும் நிலக்கோட்டை வட்டாட்சியருமான தனுஷ்கோடி தலைமையில் இயந்திரங்கள் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டது.

எதற்காக 30 லாரிகள் மற்றும் 30 கார்கள் மூலம் தேர்தல் வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் வாக்கு எந்திரங்கள் வாக்கு சாவடியில் பயன்படுத்தும் தளவாட பொருள்கள் வெளி மாநில காவல்துறையினர் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். நிலக்கோட்டை காவல் துறை துணை கண்காணிப்பாளர் செந்தில்குமார் தலைமையில் போலீசார் குவிக்கப்பட்டு தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### நத்தம் பகுதியில் போலீஸ் பாதுகாப்புடன்

## மலை கிராமங்களுக்கு குதிரையில் எடுத்து செல்லப்பட்ட மின்னணு வாக்குபெட்டிகள்

**நத்தம், ஏப், 19**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சட்டமன்ற தொகுதியில் 327 வாக்குச்சாவடிகள் உள்ளன. இதில் மலைப்பகுதி கிராமங்களான எல்லைப்பாறை மலை அடிவாரத்திலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் லிங்கவாடி-மலையூர் மலை உச்சியில் உள்ளது.இங்கு வருடந்தோறும் பாதை வசதி இல்லாமல் கரடு முரடான கற்கள் நிறைந்த பாதையை கடந்து செல்ல வேண்டும். அதன்படி இன்று நடைபெறும் தேர்தலுக்காக நேற்று காலை குதிரைகளில் 2 ஓட்டுப்பெட்டிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள், எழுதுபொருட்கள் அடங்கிய பெட்டிகளும் துப்பாக்கி போலீஸ் பாதுகாப்புடன் 3 குதிரைகளில் அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் இந்த மலையூரில் ஒரே ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்பட்டிருக்கிறது. 4 தேர்தல் உதவி அலுவலர்களும், 4 காவல்துறையை சேர்ந்தவர்களும் இதற்காக சென்றுள்ளனர். இதில் ஆண் வாக்காளர் 237 பேரும், பெண் வாக்காளர்கள் 247 பேரும் மொத்தம் 484 வாக்காளர்களும் உள்ளனர். இதை போலவே நத்தம் அருகே குட்டுப்பட்டி அருகில் கரந்த மலை மலை உச்சியில் அடிவாரத்திலிருந்து சுமார் 10கி.மீ தொலைவில் பெரிய மலையூர், சின்னமலையூர் மற்றும் வலசு ஆகிய 3 மலை கிராமங்கள் உள்ளது. இங்கு 3 வாக்குசாவடி மையங்கள் உள்ளது.

இதில் பெரிய மலையூரில் ஆண் வாக்காளர்கள் 340 பேர், பெண் வாக்காளர்கள் 320 பேர் என மொத்தம் 660 வாக்காளர்கள் உள்ளனர். சின்னமலையூரில் ஆண் வாக்காளர்கள் 116பேர், பெண் வாக்காளர்கள் 109 பேர் என மொத்தம் 225 வாக்காளர்கள் உள்ளனர்.வலசையில் ஆண் வாக்காளர்கள் 181 பேர், பெண் வாக்காளர்கள் 179 பேர் என மொத்தம் 360 வாக்காளர்கள் உள்ளனர்.இங்கு மினி பிக்-அப் வேனில் வைத்து துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் மலைகிராமங்களுக்கு ஒட்டுப்பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டது.

இதில் 4 காவல்துறை அதிகாரிகள், தேர்தல் உதவி அலுவலர்கள், தேர்தல் பார்வையாளர்கள், வனத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட 25 பேர் குழுவினர் 3 வாக்குச்சாவடிகளுக்கும் பிரித்து அனுப்பப்பட்டுள்ளனர். இந்த வாக்குப்பெட்டிகள் தாசில்தார் சுகந்தி மேற்பார்வையில் மலைக்கிராமங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.மேலும் துணை போலீஸ் சூப்பிரண்டு உதயகுமார், நத்தம் இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி உள்பட 500க்கும் மேற்பட்ட போலீசார்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### தேர்தல் நாளான இன்று

## ஊதியத்துடன் விடுமுறை அளிக்க தொழிலக பாதுகாப்பு இணை இயக்குனர் அறிவுறுத்தல்

**விருதுநகர் ஏப்.19.**

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவு 135பி-ன் படி தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் மற்றும் அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தினக்கூலி, தற்காலிக பணியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தேர்தல் நாளன்று அவர்கள் வாக்களிக்க ஏதுவாக அன்றைய தினம் சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

எனவே விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் வாக்கு பதிவு நாளான ஏப்ரல் 19ம் தேதி வெள்ளிக்கிழமை அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளிக்க வேண்டும். தேர்தல் நாளன்று விடுமுறை அளிக்க தவறும் கட்டுமான நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் மீது மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவு 135பி-ன் படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இது குறித்து புகார் அளிக்க ஏதுவாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சார்பில் மாவட்ட அளவிலான கட்டுப்பாட்டு குழு அமைக்கப்பட்டுள்ளது. எனவே விடுமுறை அளிக்காத தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் மீது புகார்கள் இருப்பின் பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்கள் கீழ்கண்ட கட்டுப்பாட்டு குழு அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என விருதுநகர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இணை இயக்குநர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பட்டிவீரன்பட்டி பேரூராட்சி சார்பாக கோடைகால தண்ணீர் பந்தல் திறப்பு



**வத்தலகுண்டு ஏப்.19**

திண்டுக்கல் மாவட்டம் பட்டிவீரன்பட்டி பேரூராட்சி சேர்ந்த ரேடியோ மைதானம், மற்றும் பேரூராட்சி அலுவலகம் முன்பாக ஆக இரண்டு இடங்களில் திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் பூங்கொடி, திண்டுக்கல் மண்டலம் பேரூராட்சிகளில் உதவி இயக்குனர் மனோரஞ்சிதம் ஆகியோர் உத்தரவின் பெயரில் பட்டிவீரன்பட்டி பேரூராட்சி சார்பாக கோடைகால தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது.

பேரூராட்சி செயல் அலுவலர் பாலசுப்பிரமணியன் அனைவரையும் வரவேற்றார். பேரூராட்சி இளநிலை உதவியாளர் மோகனப்பிரியா. முன்னிலையில் அனைத்துபேரூராட்சி பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.

## சிக்னிஃபை நிறுவனம் ஆந்திரப் பிரதேசத்தின் பார்வதிபுரம் மானியத்தில் 60+ பழங்குடி கிராமங்களில் ஒளியை ஏற்றுகிறது

**சென்னை, ஏப் 19-**

விளக்குகள் தொழிலில் உலகளவில் முன்னணியில் இருக்கும் சிக்னிஃபை நிறுவனம் ஆந்திரப் பிரதேசத்தின் பார்வதிபுரம் மான்யம் மாவட்டத்தில் உள்ள 61 பழங்குடி மற்றும் ஒதுக்குப்புறமான கிராமங்களில் வசிக்கின்ற உள்ளூர் குடிமக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்தும் எல்இடி தெரு விளக்குகள் மூலம் ஒளி ஏற்றியுள்ளது இந்தியா முழுவதும் நீடித்த நிலையான கிராமப்புற வளர்ச்சி மற்றும் பெண்களின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிறுவனத்தின் 'ஹர் கான் ரோஷன்' சி.எஸ்.ஆர் (CSR) திட்டத்தின் ஒரு பகுதியாக அடிமட்டத்திலிருந்து பணிபுரிகின்ற தன்னார்வ தொண்டு அமைப்பான ஜன கல்யாண சமக்யா உடன் இணைந்து இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இது குறித்து சிக்னிஃபை, கிரேட்டர் இந்தியாவின் சந்தைப்படுத்தல், உத்தி, அரசு விவகாரங்கள் மற்றும் சிஎஸ்ஆர் தலைவர் நிகில் குப்தா கூறுகையில், எங்கள் சிஎஸ்ஆர் உத்தி மற்றும் திட்டங்கள் பிரகாசமான வாழ்க்கை மற்றும் சிறந்த உலகத்திற்கான ஒளியின் அபாரமான திறனைத் திறப்பது எனும் எங்கள் பிராண்ட் நோக்கத்திற்கு இசைவாக உள்ளன,. எங்கள் சி.எஸ்.ஆர் (CSR) திட்டங்கள் மற்றும் பின்தங்கிய பல்வேறு சமூகங்களை மேம்படுத்துவதற்கான எங்கள் நோக்கத்தில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

ஆந்திராவின் பழங்குடி கிராமங்களில் வாழ்க்கையை மேம்படுத்த உதவும் இத்திட்டத்தில் ஜன கல்யாண சமாக்யாவுடன் கூட்டு சேர்ந்ததில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம்'' என்றார். மேலும் ஜன கல்யாண சமாக்யாவின் தலைமை நிர்வாக அதிகாரி நிதில் வர்கீஸ் கூறுகையில், சிக்னிஃபை நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிவது எங்கள் பெரிய இலக்குகளுக்கு இசைவாக உள்ளன,

மேலும் நாங்கள் ஒன்றாக இணைந்து இந்த பழங்குடி கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம், அவர்களுக்கு சுத்தமான மற்றும் மின்சார சிக்கனம் கொண்ட தெரு விளக்கு தீர்வுகளை கிடைக்கச் செய்துள்ளோம். உள்ளூர் மக்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான சிக்னிஃபை நிறுவனத்தின் முயற்சிகளை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம் என்று கூறினார்.

## வேல்ஸ் கால்பந்து கிளப்பின் சர்வதேச தூதராக ஸ்பெயின் வீரர் கெய்ஸ்கா டோகுரோ நியமனம்

**சென்னை, ஏப் 19-**

வேல்ஸ் கால்பந்து கிளப்பின் சர்வதேச தூதராக ஸ்பெயின் கால் பந்து வீரரும், வேல்ஸ் கால்பந்து கிளப் - விளையாட்டு ஆடைகள் பிராண்ட் பூமாவின் தேசிய ஒத்துழைப்பாளருமான கெய்ஸ்கா டோகுரோவை வேல்ஸ் கால்பந்து கிளப் தலைவர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் நியமித்துள்ளார். தமிழ்நாட்டின் ஒரே ஐ-லீக் அணியான வேல்ஸ் கால்பந்து கிளப், டாக்டர் ஐசரி கே கணேஷின் தொலைநோக்கு தலைமையின் கீழ் 2024-25ம் ஆண்டு சீசனுக்காக முன்னேறி வருகிறது. விளையாட்டுத் துறையின் மீது தனக்குள்ள ஆர்வத்தின் காரணமாக இந்த கிளப்பின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளில் ஐசரி கணேஷ் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த நிலையில் தனது கிளப்பின் சர்வதேச தூதராக ஸ்பெயின் கால்பந்து வீரர் கெய்ஸ்கா கூறுகையில், டோகுரோவை நியமித்துள்ளார். டோகுரோ, நியமனத்தின் மூலம் வேல்ஸ் கால்பந்து கிளப்பானது சர்வதேச கால்பந்து அகாடமியை போல உருமாற்றம் பெற்றுள்ளது. வேல்ஸ் எப்சி இன்டர்நேஷனல் புட்பால் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ள இங்கு இந்தியா முழுவதும் உள்ள வீரர்களுக்கு ஸ்பெயின் பயிற்சியாளர்களின் கீழ் பயிற்சியும், மேலும் அவர்கள் பல்வேறு யூத் லீக் மற்றும் ஐ-லீக் போட்டிகளில் பங்கேற்கவும் வாய்ப்பு வழங்கப்பட உள்ளது என்று கூறினார்.

## மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண விருந்துக்கு பொதுமக்கள் உணவு பொருட்களை வழங்கலாம்

**மதுரை, ஏப் 19-**

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாண விருந்துக்கு பொதுமக்கள் உணவு பொருட்களை வழங்கலாம் என்று பழமுதிர்ச்சோலை திருவருள் முருகன் பக்த சபை தெரிவித்துள்ளது.

உலகப் புகழ்பெற்ற மீனாட்சி, சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் வருகிற 21-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது.

இதில் லட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பார்கள். சுவாமி, அம்மன் திருக்கல்யாணம் முடிந்த பின்பு பக்தர்களுக்கு கல்யாண விருந்து வழங்கப்படுவது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக பாதுகாப்பு காரணங்களுக்காக மீனாட்சி பஜார் அருகே உள்ள சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் விருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்தாண்டும் திருக்கல்யாண விருந்து வழங்கப்பட உள்ளது.

வரும் 20-ம் தேதி (சனிக்கிழமை) மாலை மாப்பிள்ளை அழைப்பு விருந்து நடக்கிறது. திருக்கல்யாணத்தன்று காலை 7 மணி முதல் இடைவெளி இல்லாமல் பக்தர்கள் அனைவருக்கும் கற்கண்டு சாதம், வெண்பொங்கல், சாம்பார் சாதம், தக்காளி சாதம், வடை, பச்சடி ஆகியவை வழங்கப்பட உள்ளன. இதற்கு தேவையான காய்கறிகளை பரவை, மாட்டுத்தாவணி காய்கறி சந்தை வியாபாரிகளும், சமையல் கியாஸ் சிலிண்டர்களை எரிவாயு நிறுவனத்தினரும் வழங்குகின்றனர்.

அரிசி, பருப்பு, எண்ணெய், நெய் மற்றும் மளிகை பொருட்களை பொதுமக்களும், பக்தர்களும் வழங்கி வருகின்றனர். எனவே விருந்துக்கு தேவையான பொருட்களை கொடுக்க விரும்புபவர்கள் சேதுபதி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் வழங்கலாம்.மேற்கண்ட தகவலை பழமுதிர்ச்சோலை திருவருள் முருகன் பக்த சபை தெரிவித்துள்ளது.

### திருமங்கலம் அருகே சுற்றுச்சூழலை பாதித்து வரும்

## கேரள மாநில தனியார் கெமிக்கல் நிறுவனத்தை தடை செய்திட 6 கிராம மக்கள் கோரிக்கை மனு



**திருமங்கலம். ஏப்ரல்.19.**

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி தாலுகா கே.சென்னம்பட்டி கிராம பகுதியில் சுற்றுச் சூழலை பாதிக்கும் வகையில் கேரளாவை சேர்ந்த தனியார் கெமிக்கல் நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் இறைச்சி கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகளை சுத்திகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மதுரை மாவட்டம் விருதுநகர் மாவட்டத்தில் இருந்து வாகனங்களில் கோழி இறைச்சி கழிவுகள் மற்றும் மருத்துவ கழிவுகளை கொண்டு வந்து சுத்திகரிப்பதால் அதிலிருந்து வெளியேறும் துர்நாற்றம் ஆறுக்கும் மேற்பட்ட கிராம மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் மேலும் இறைச்சி கழிவுகளிலிருந்து வெளியேறக்கூடிய கழிவு நீரால் சுற்றுவட்ட கிராமப்புற பகுதிகளில் மண் வளம் மற்றும் நீர்வளம் பாதிக்கப்படுவதாகவும் எனவே அதனை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என 6 கிராமத்து மக்கள் சார்பில் ஏற்கனவே கோரிக்கை மனு அளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் கடந்த சில தினங்களுக்கு முன்பு அப்பகுதிக்கு கோழி கழிவுகளை ஏற்றி வந்த மினி வேனை சிறை பிடித்து கே.சென்னம்பட்டி, குராயூர், ஓடைப்பட்டி, மேலப்பட்டி, பேய்குளம் உள்ளிட்ட கிராம மக்கள் 200க்கும் மேற்பட்டோர் இரண்டு நாட்களுக்கு முன்பு நள்ளிரவு 12 மணிக்கு திடீரென கள்ளிக்குடி - காரியாபட்டி சாலையில் அமர்ந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தற்போது வரை இந்த நிறுவனம் தொடர்ந்து செயல்பட்டு வருவதால், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வரும் தனியார் கெமிக்கல் நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆறு கிராமங்களின் மக்கள் திரண்டு வந்து வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியரிடம் மனு அளித்துள்ளனர்.

இந்த மனு மீது நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் அப்பகுதியில் உள்ள அனைத்து கிராம மக்களையும் ஒன்று திரட்டி தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டம் நடத்துவோம் என்று தெரிவித்துள்ளனர். சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்திடுவதாக கூறி திருமங்கலம் அருகே செயல்பட்டு வரும் கேரள மாநில தனியார் கெமிக்கல் நிறுவனத்தை தடை செய்திட கோரி கிராம மக்கள் நடத்தி வரும் தொடர் போராட்டங்களால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவி வருகிறது.

## மக்களவை தேர்தல்களுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்: விருதுநகர் கலெக்டர்

**விருதுநகர் ஏப்.19.**

மக்களவை பொதுத் தேர்தல் இன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு விருதுநகர் மாவட்டத்தில் அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட விருதுநகர், திருப்பரங்குன்றம், திருமங்கலம், சாத்தூர், சிவகாசி, அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 7,33,217 ஆண்கள், 7,68,520 பெண்கள், 205 இதர வாக்களர்கள் என ஆக மொத்தம் 15,01,942 வாக்களர்கள் உள்ளனர். இந்த 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 1680 வாக்குச்சாவடிகள் உள்ளன. இதில் 188 பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்டு உள்ளன.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் பதற்றமானவை என கண்டறியப்பட்ட 148 வாக்குச்சாவடிகளிலும் வாக்குப்பதிவினை நேரடியாக கண்காணிக்கும் வகையில் 148 தேர்தல் நுண்பார்வையாளர்களும், கூடுதலாக 26 தேர்தல் நுண்பார்வையாளர்களும் என மொத்தம் 174 தேர்தல் நுண்பார்வையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்குபதிவு பணிக்காக விருதுநகர் மக்களவை தொகுதியில் மொத்தம் 8187 வாக்குச்சாவடி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 4066 வாக்குபதிவு இயந்திரங்களும், 2033 கட்டுப்பாட்டு இயந்திரங்களும், 2202 விவிபேட் (வாக்குப்பதிவு சரிபார்க்கும் இயந்திரம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், வாக்குப்பதிவுக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 8000-க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் 156 மண்டல குழுக்களும், 54 தேர்தல் பறக்கும் படை கண்காணிப்புக் குழுக்களும், 54 நிலையான கண்காணிப்பு குழுக்களும், 6 வீடியோ கிராபர்களும், 6 வீடியோ கண்காணிப்பு குழுக்களும், 6 கணக்கு குழுக்களும் பணியில் உள்ளனர். பொதுமக்கள் தேர்தல் தொடர்பான புகார்களை 1800 425 2166 என்ற கட்டணம் இல்லா தொலைபேசி எண்ணிலும், 04562- 252100, 221301, 221302, 221303, மாவட்ட தேர்தல் தொடர்பு மையத்தை 1950, 0452-234600, என்ற எண்ணிலும் புகார் தெரிவிக்கலாம்.

எனவே, இந்த மக்களவைத் தேர்தலில் 18 வயது நிரம்பிய அனைத்து வாக்காளர்களும், பணம் மற்றும் பரிசு பொருட்கள் பெறாமல் நேர்மையான முறையில் 100 சதவிகிதம் வாக்களித்து ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும் என கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்துள்ளார்

## சாத்தூர் அருகே முன்விரோதம் காரணமாக நடந்த கொலை: 3 பேரிடம் விசாரணை

**விருதுநகர் ஏப்.19.**

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகில் உள்ள சத்திரப்பட்டி கிராமத்தில் இருக்கும் சக்தி மாரியம்மன் கோவில் வேறு இடத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என உயிரிழந்த தவித்து ராஜன் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உள்ளார்.

இவ்வழக்கின் அடிப்படையில் நீதிமன்றம் கோவிலை வேறு இடத்திற்கு மாற்ற உத்தரவிட்டுள்ளது.

இதனால் தவிர்த்து ராஜன் மீது அது ஊரைச் சேர்ந்த அரவிந்த் (25) பாண்டியராஜன் (24) பாண்டியன் (23) ஆகிய மூவருக்கும் மூன்று விரோதம் சேர்ந்ததாக தெரிய வருகிறது. இதன் அடிப்படையில் வெம்பக்கோட்டை போலீசார் மூன்று பேரையும் பிடித்து விசாரணை நடத்தி வருவதாக தெரிய வருகிறது.

**மரம் மனிதனின் உரம்**

## ஆல் ரவுண்டர்களுக்கு பாதிப்பு:
# இம்பேக்ட் விதிமுறையை எதிர்க்கும் ரோகித்



**மும்பை, ஏப். 19-**

இம்பேக்ட் விதிமுறையால் ஆல் ரவுண்டர்கள் தங்களது முக்கியதுவத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வெளிப்படையாக கருத்து தெரிவித்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் ரோகித் சர்மா.

**நடப்பு ஐ.பி.எல்.லில்...**

இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் தொடரான ஐ.பி.எல்.16 சீசன்களை கடந்து தற்போது 17-வது சீசனாக வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இதற்கென்று தனி ரசிகர் பட்டாளமே உண்டு. மேலும் இந்த தொடரின் சுவாரஸ்யத்தை கூட்ட கடந்த சீசனில் இம்பேக்ட் பிளேயர் விதிமுறை கொண்டுவரப்பட்டது. அந்த விதிமுறையானது தற்போது நடைபெற்று வரும் நடப்பு ஐ.பி.எல். தொடரிலும் தொடர்ந்து வரும் வேளையில் போட்டிகளின் முடிவு இம்பேக்ட் பிளேயர் மூலமாக தீர்மானமாகி வருகிறது.

**கூடுதல் சாதகமும்...**

இந்த இம்பேக்ட் பிளேயர் விதிமுறை மூலம் அணிகளுக்கு கூடுதல் சாதகமும் கிடைத்து வருகிறது. அதாவது வழக்கமாக பங்குபெறும் 11 வீரர்களை தவிர்த்து கூடுதலாக 5 வீரர்களை டாசின் போதே கேப்டன் இம்பேக்ட் பிளேயர் லிஸ்டில் அறிவிக்கலாம். அப்படி அறிவிக்கப்படும் அந்த ஐந்து பேர்களில் ஒருவர் பேட்ஸ்மேனாகவோ அல்லது பவுலராகவோ களமிறங்க முடியும். அப்படி இம்பேக்ட் பிளேயராக களமிறங்கும் வீரர் பவுலராக இருந்தால் நான்கு ஓவர்களை வீசலாம். அதேபோன்று பேட்ஸ்மேனாக இருந்தால் முழுவதுமாக பேட்டிங் விளையாடலாம்.


**ரசிகன் இல்லை...**

இந்நிலையில் இந்த விதிமுறையில் தனக்கு அதிருப்தி இருப்பதாக வெளிப்படையாக அறிவித்துள்ள இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா இதுகுறித்து கூறுகையில் "உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் நான் இம்பேக்ட் வீரர் என்ற விதிமுறையின் ரசிகன் இல்லை. ஏனெனில் இந்த விதிமுறையினால் நமது அணியின் ஆல் ரவுண்டர்களை நாம் சரியாக பயன்படுத்த முடியாது என்று நினைக்கிறேன். ஷிவம் துபே, வாஷிங்டன் சுந்தர் போன்ற வீரர்கள் பந்து வீசாதது நமக்கு நல்லதல்ல.

**தேவையற்ற ஒன்று...**

ஆல் ரவுண்டர்கள் கிரிக்கெட்டில் சாதிக்க வேண்டும் எனில் அவர்களுக்கு சரியான வாய்ப்பு வழங்கப்பட்டு பேட்டிங் மற்றும் பவுலிங் இரண்டுமே கிடைக்க வேண்டும். ஆனால் இம்பேக்ட் விதிமுறையின் மூலம் ஆல் ரவுண்டர்களுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போவதாக உணர்கிறேன். எனவே என்னை பொறுத்தவரை இம்பேக்ட் பிளேயர் விதிமுறை தேவையற்ற ஒன்று. அதே நேரத்தில் ஆல் ரவுண்டர்களின் தாக்கம் உலக அளவில் அதிகமாகி உள்ள வேளையில் இந்திய ஆல்ரவுண்டர்கள் இம்பேக்ட் விதிமுறையினால் காணாமல் போகவும் வாய்ப்பு உள்ளது என்றார்.

# சி.எஸ்.கே. அணியின் தொடக்க ஆட்டக்காரராக ரிச்சர்டு க்ளீசன்



**சென்னை, ஏப். 19-**

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர் டெவான் கான்வேக்குப் பதிலாக மாற்று வீரரை சிஎஸ்கே அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

**விளையாட வில்லை...**

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரரான டெவான் கான்வே காயம் காரணமாக நடப்பு ஐபிஎல் தொடரில் சிஎஸ்கே அணியில் விளையாடவில்லை. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 தொடரின் போது இடது கை கட்டை விரலில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. காயத்திலிருந்து குணமடைந்து அணிக்குத் திரும்புவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவருக்குப் பதிலாக மாற்று வீரர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

**ரிச்சர்டு க்ளீசன்...**

டெவான் கான்வேவுக்குப் பதிலாக இங்கிலாந்து வேகப் பந்துவீச்சாளர் ரிச்சர்டு க்ளீசன் மாற்று வீரராக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரை ரூ. 50 லட்சத்துக்கு சிஎஸ்கே ஒப்பந்தம் செய்துள்ளது. ரிச்சர்டு க்ளீசன் முதல் முறையாக ஐபிஎல் தொடரில் விளையாடவுள்ளார். 36 வயதாகும் ரிச்சர்டு க்ளீசன் இங்கிலாந்து அணிக்காக ஆறு டி20 போட்டிகளில் விளையாடி 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இந்தியாவுக்கு எதிரான அவரது அறிமுக டி20 போட்டியில் ரோஹித் சர்மா, விராட் கோலி மற்றும் ரிஷப் பந்த்தின் விக்கெட்டினை வீழ்த்தினார். வலது கை வேகப் பந்துவீச்சாளரான அவர் டி20 போட்டிகளில் இதுவரை 100க்கும் அதிகமான விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

# குஜராத்தை வீழ்த்தியது டெல்லி



**அகமதாபாத், ஏப். 19-**

குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 6 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

**32-வது லீக் ஆட்டம்...**

17-வது ஐபிஎல் கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் இரவு அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நடந்த 32-வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியன் குஜராத் டைட்டன்ஸ் அணி, டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியுடன் மோதியது. விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக டெல்லி அணியில் டேவிட் வார்னர் ஆடவில்லை. 'டாஸ்' வென்ற டெல்லி அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

**ரஷித் கான் 31 ரன்...**

அதன்படி குஜராத் அணி முதலில் பேட்டிங் செய்தது. குஜராத் அணியின் தொடக்க பேட்ஸ்மேன்களாக சாஹா மற்றும் சுப்மன் கில் களம் இறங்கினர். சாஹா 10 பந்துகளில் 2 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்க, கில் 8 ரன்கள் எடுத்து ஏமாற்றம் அளித்தார். தமிழக வீரர் சாய் சுதர்சன் 12 ரன்னிலும், அதிரடி பேட்ஸ்மேன் டேவிட் மில்லர் 2 ரன்னிலும், அபினவ் மனோகர் 8 ரன்னிலும் விக்கெட்டை இழந்தனர். ராகுல் தெவாதியா 10 ரன்களும் துணை கேப்டன் ரஷித் கான் 24 பந்துகளில் 31 ரன்களும் எடுத்தனர்.

**89 ரன்கள் மட்டுமே...**

இறுதியாக 17.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த குஜராத் டைட்டன்ஸ் அணி 89 ரன்கள் மட்டுமே எடுத்தது. டெல்லி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் முகேஷ்குமார் 3 விக்கெட்டும், இஷாந்த் ஷர்மா, டிரிஸ்டான் ஸ்டப்ஸ் தலா 2 விக்கெட்டும் எடுத்தனர். விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் 2 கேட்ச், 2 ஸ்டம்பிங் செய்தது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து 90 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி ஆடிய டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி 8.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 92 ரன்கள் சேர்த்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

**ரிஷப் ஆட்டநாயகன்..**

டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி தரப்பில், அதிகபட்சமாக ஜாக் பிரேசர் மெக்குர்க் 20 ரன்னும், ஷாய் ஹோப் 19 ரன்னும், விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் 16 ரன்னும் எடுத்தனர். விக்கெட் கீப்பிங்கில் அசத்திய ரிஷப் பண்ட் ஆட்டநாயகன் விருதை பெற்றார். 3-வது வெற்றியை பெற்ற டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி புள்ளிபட்டியலில் 9-ல் இருந்து 6-வது இடத்துக்கு முன்னேறியது.

# இமாச்சல்லில் மிக உயரமான வாக்குச்சாவடி

**சிம்லா, ஏப். 19-**

இமாச்சல பிரதேசத்தில் 52 வாக்காளர்களுக்காக மலைகளுக்கு இடையே உலகின் மிக உயரமான பள்ளத்தாக்கு பகுதியில் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டிருக்கிறது.

இமாச்சலப் பிரதேசத்தின் எல்லை மாவட்டமான லாஹவுல் மற்றும் ஸ்பிதி பள்ளத்தாக்கில் 15,256 அடி உயரத்தில் உலகின் மிக உயரமான வாக்குச் சாவடியைக் கொண்ட தாஷிகாங் என்கிற கிராமம் உள்ளது. இந்தியா-சீனா எல்லையில் இருந்து 29கிமீ தொலைவில் அமைந்துள்ள இந்த வாக்குச்சாவடி தாஷிகாங் மற்றும் கெட்டே ஆகிய இரண்டு கிராமங்களை உள்ளடக்கியது. இக்கிராமங்களில் மொத்தம் 75 பேர் வசிக்கின்றனர். அதில் 30 ஆண்கள் மற்றும் 22 பெண்கள் என 52 பேர் வாக்குரிமை பெற்றுள்ளனர்.

ஸ்பிதி பகுதி ஒரு கடுமையான குளிர் பாலைவன பள்ளத்தாக்கு ஆகும். இது கிழக்கில் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள திபெத்திய தன்னாட்சிப் பகுதியின் எல்லையாக உள்ளது. இந்த பள்ளத்தாக்கில் தாஷிகாங் உள்பட மொத்தம் 29 வாக்குச் சாவடிகள் உள்ளன. இமாச்சல பிரதேசத்தை பொறுத்தவரை, மாநிலத்தில் ஒரே கட்டமாக ஜூன் 1-ம் தேதி மக்களவைத் தேர்தல் நடைபெறுகிறது. இந்த தொகுதியில் காங்கிரஸின் விக்ரமாதித்ய சிங்கை எதிர்த்து பாஜக வேட்பாளரும் நடிகையுமான கங்கனா ரணாவத் களம் காண்கிறார்.

# 'சப்சோனிக்' ஏவுகணை வெற்றிகரமாக சோதனை

**புவனேஸ்வரம், ஏப். 19-**

தரையிலிருந்து குறுகிய தூரம் சென்று இலக்கை தாக்கும் சப்சோனிக் ஏவுகணை நேற்று வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டதாக டி.ஆர்.டி.ஓ. தகவல் வெளியிட்டுள்ளது.

டி.ஆர்.டி.ஓ. எனப்படும் ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, தரை, கப்பல், மற்றும் வானிலிருந்து நீண்ட, குறுகிய தூரம் சென்று இலக்கை தாக்கும் ஏவுகணைகளை வடிவமைத்து சோதனை செய்து வருகிறது. இதன்படி தரையிலிருந்து குறுகிய இலக்கை தாக்கும் சப்சோனிக் ஏவுகணையை டி.ஆர்.டி.ஓ., வடிவமைத்துள்ளது. இந்த ஏவுகணை நேற்று ஒடிசாவில் உள்ள சந்திப்பூர் ஏவுதளத்திலிருந்து விண்ணில் வெற்றிகரமாக சோதனை நடத்தியது, ஏவுகணை விண்ணில் சீறிப்பாய்ந்த வீடியோவை எக்ஸ்' தளத்தில் டி.ஆர்.டி.ஓ. பதவிவேற்றியுள்ளது.

## 20-ம் தேதி டிக்கெட் விற்பனை

10 அணிகள் பங்கேற்றுள்ள 17-வது ஐ.பி.எல். சீசன் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது.இந்நிலையில், வரும் 23ம் தேதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சென்னை- லக்னோ அணிகள் மோதுகின்றன. இந்த போட்டிக்கான டிக்கெட் வரும் 20ம் தேதி விற்பனை செய்யப்படுகிறது. அதன்படி, காலை 10.40 மணிக்கு பேடிஎம் மற்றும் www.insider.in தளத்தில் நடைபெறும் என சென்னை அணி நிர்வாகம் அறிவித்துள்ளது

டிக்கெட் விலை குறைந்தபட்சம் ரூ.1700 முதல் அதிகபட்சம் ரூ.6000 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி விளையாடும் போட்டிகளுக்கான டிக்கெட் விற்பனை முழுவதும் ஆன்லைன் மூலம் மட்டுமே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரக்ஞானந்தா தோல்வி

உலக சாம்பியனுடன் மோதும் வீரர், வீராங்கனை யார்? என்பதை முடிவு செய்யும் கேண்டிடேட் செஸ் போட்டி கனடாவில் உள்ள டொரான்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா சார்பில் 5 பேர் பங்கேற்றுள்ளனர்.14 ரவுண்டுகளை கொண்ட இந்த போட்டி தொடரின் 11-வது சுற்று நடந்தது.சென்னையை சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் டி. குகேஷ் இந்த சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த பேபியானோ கருணாவை எதிர் கொண்டார். வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய குகேஷ் இந்த போட்டியில் 40-வது காய் நகர்த்தலுக்கு பிறகு டிரா செய்தார்.

மற்றொரு சென்னை கிராண்ட்மாஸ்டரான பிரக்ஞானந்தா மற்றும் விதித் குஜராத்தி ஆகியோர் 11-வது சுற்றில் தோல்வியை தழுவினார்கள். ஹிகாரு நகமுரா (அமெரிக்கா) பிரக்ஞானந்தாவையும், இயன் நெபோம்னியாச்சி (ரஷியா) விதித் குஜராத்தியையும் தோற்கடித்தனர்.11 சுற்றுகள் முடிவில் ரஷிய வீரர் இயன் நேபோம்னியாச்சி 7 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளார். டி.குகேஷ், ஹிகாரு நகமுரா ஆகியோர் தலா 6.5 புள்ளியுடன் அதற்கு அடுத்த நிலைகளில் உள்ளனர.பிரக்ஞானந்தா 5.5 புள்ளிகளுடன் 5-வது இடத்திலும், விதித் குஜராத்தி 5 புள்ளிகளுடன் 6-வது இடத்திலும் உள்ளனர்.

## தோல்வி குறித்து ஷுப்மன் கில்

சொந்த மண்ணில் ஏற்பட்ட மோசமான தோல்விக்குப் பிறகு குஜராத் அணியின் கேப்டன் ஷுப்மன் கில் தோல்விக்கான காரணம் குறித்துப் பேசியுள்ளார். தோல்விக்கான காரணம் குறித்து போட்டி நிறைவடைந்த பிறகு அவர் பேசியதாவது: எங்களது பேட்டிங் மிகவும் சராசரியானதாக இருந்தது. தோல்வியைப் பற்றி யோசிக்காமல் அதிலிருந்து நகர்ந்து வலிமையாக திரும்பி வர வேண்டும். ஆடுகளம் சிறப்பானதாக இருந்தது. சில ஆட்டமிழப்புகளை பார்க்கும்போது, அதில் ஆடுகளத்தைக் குறை கூறுவதற்கு ஒன்றுமில்லை. தவறான ஷாட்டுகளை தேர்ந்தெடுத்து விளையாடியதே விக்கெட்டுகளை இழக்க காரணமென்று கூறுவேன்.

எதிரணி 89 ரன்கள் என்ற எளிய இலக்கை துரத்தும்போது, யாராவது ஒருவர் இரண்டு ஹாட்ரிக் விக்கெட்டுகளை எடுக்கவில்லையென்றால் ஆட்டம் எதிரணிக்கு சாதகமானதாகவே இருக்கும். நடப்பு ஐபிஎல் தொடரின் பாதியில் இருக்கிறோம். இதுவரை 3 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளோம். அடுத்து விளையாடவுள்ள 7 போட்டிகளில் 5 - 6 போட்டிகளில் கடந்த இரண்டு சீசன்களைப் போலவே வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என்றார். நடப்பு ஐபிஎல் தொடரில் இதுவரை 7 போட்டிகளில் விளையாடியுள்ள குஜராத் டைட்டன்ஸ் 3 வெற்றிகளுடன் புள்ளிப்பட்டியலில் 7-வது இடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ரிஷப் பந்த் குறித்து பீட்டர்சன்

ரிஷப் பந்த் சிறப்பாக செயல்படுவது அவருக்கும், இந்திய அணிக்கும் ஊக்கமளிக்கும் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் கெவின் பீட்டர்சன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: ரிஷப் பந்த் ஃபீல்டிங்கில் வேகமாக நகர்வது, திறம்பட பந்துகளை கேட்ச் செய்வது அவருக்கும், இந்திய அணி நிர்வாகத்துக்கும் ஊக்கமளிக்கும். காயத்திலிருந்து மீண்டு வருபவர்களைப் போல ரிஷப் பந்த்துக்கும் முழுமையான ஆட்டத்தை வெளிப்படுத்த சிறிது காலம் தேவைப்படும். அவர் பயங்கரமான கார் விபத்தில் சிக்கி கிரிக்கெட்டுக்கு மீண்டும் திரும்பியுள்ளார். அதனால் அவருக்கு சிறிது காலம் கொடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

உலகக் கோப்பைக்குத் தயாராக அவர் 14 - 15 ஐபிஎல் போட்டிகளில் விளையாட வேண்டும். அவர் எந்த அளவுக்கு அதிகம் கிரிக்கெட் விளையாடுகிறாரோ அந்த அளவுக்கு டி20 உலகக் கோப்பைக்குத் தயாராக இருப்பார் என்றார். கடந்த 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு, சிறப்பாக கீப்பிங் செய்ததன் அடிப்படையில் நேற்றையப் போட்டியில் முதல் முறையாக ரிஷப் பந்த்துக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த 2009 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான போட்டியில் சிறப்பான கீப்பிங் திறமையை வெளிப்படுத்தியமைக்காக தினேஷ் கார்த்திக்குக்கு ஆட்டநாயகன் விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கோலி தொடக்க ஆட்டக்காரரா ?

உலகக்கோப்பை இந்திய அணியின் தேர்வு பற்றி அஜித் அகர்கர் மற்றும் ராகுல் டிராவிட்டுடன், கேப்டன் ரோகித் சர்மா மீட்டிங் நடத்தியதாக கடந்த சில தினங்களாக செய்திகள் வலம் வருகின்றன. அதில் டி20 உலகக் கோப்பையில் ரோகித் சர்மாவுடன் விராட் கோலி துவக்க வீரராக களமிறங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தன. இந்நிலையில் அதை முற்றிலுமாக மறுக்கும் இந்திய அணியின் ரோகித் சர்மா அந்த செய்திகள் அனைத்தும் பொய்யானவை என்று கூறியுள்ளார். மேலும் உலகக் கோப்பை சம்மந்தமாக அஜித் அகர்கரை துபாயில் பார்க்கவில்லை என்றும் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் பேசியது பின்வருமாறு;- "நான் யாரையும் சந்திக்கவில்லை. அஜித் அகர்கர் துபாயில் எங்கேயோ கோல்ப் விளையாடிக் கொண்டிருப்பார். ராகுல் டிராவிட் பெங்களூருவில் தம்முடைய குழந்தை விளையாடுவதை பார்த்துக் கொண்டிருப்பார். அவ்வளவுதான் விஷயம். உண்மையாக நாங்கள் யாரும் சந்திக்கவில்லை. இன்றைய காலகட்டத்தில் நான், ராகுல், அஜித் அல்லது பி.சி.சி.ஐ. சார்பில் யாரேனும் ஒருவர் கேமரா முன் வந்து பேசுவதை தவிர்த்து மற்ற அனைத்தும் பொய்யானவை"என்று கூறினார்.

## மீனாட்சி அம்மன் கோவில் செங்கோல் விவகாரம்:
# ஆகம விதிகள் குறித்து ஒரே நாளில் நீதிபதிகள் முடிவுக்கு வர இயலாது
## உயர் நீதிமன்ற மதுரை கிளை கருத்து

**மதுரை, ஏப். 19-**

மீனாட்சி அம்மன் கோவில் செங்கோல் விவகாரத்தில் நீதிபதிகள் ஆகம விதி நிபுணர்கள் அல்ல என்று கருத்து தெரிவித்துள்ள மதுரை ஐகோர்ட் நீதிபதிகள் ஆகம விதி நிபுணர்கள் அல்ல என்றும் தெரிவித்துள்ளது.

மதுரையைச் சேர்ந்த தினகரன் என்பவர் மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்த மனுவில், "மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழாவில் ஒவ்வொரு நிகழ்வும் ஆகம விதிகளை பின்பற்றி நடத்தப்படுகிறது. இந்த விழாவின் 8-ம் நாளில் பட்டாபிஷேக நிகழ்ச்சியின் போது மீனாட்சி அம்மன் கைகளில் இருந்து ஒப்புவிக்கப்படும் செங்கோலை அறங்காவலர் குழு தலைவர் பெற்றுக்கொள்வார்.

ஆகம விதிகளின்படி திருமணம் ஆகாதவரோ, கணவர் அல்லது மனைவியை இழந்தவரோ செங்கோலை பெற்றுக்கொள்ள இயலாது. தற்போது மீனாட்சி அம்மன் கோவிலின் அறங்காவலர் குழு தலைவராக பி.டி.ஆர். பழனிவேல் ராஜனின் மனைவி ருக்மணி பழனிவேல் ராஜன் உள்ளார். அவர் கணவரை இழந்தவர் என்பதால், ஆகம விதிகளின்படி அவரிடம் செங்கோலை வழங்க இயலாது. வேறு தகுதியான நபரிடம் செங்கோலை வழங்க உத்தரவிட வேண்டும்" என்று மனுதாரர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தார். இதையடுத்து தனி நீதிபதியின் உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுதாரர் மேல்முறையீடு செய்தார். இந்த மேல்முறையீட்டு மனு நீதிபதி சுரேஷ்குமார், நீதிபதி அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில், "கோவில் நிகழ்வுகளில் ஆகம விதிகளை முறையாக பின்பற்ற வேண்டும்" என வாதிடப்பட்டது. அதே சமயம், "தனி நீதிபதியின் உத்தரவு தெளிவாக உள்ளது. அதில் தலையிட வேண்டிய அவசியம் இல்லை" என அரசு தரப்பு வாதிட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "அக்காலத்தில் என்ன நிகழ்ந்தது என்பது தெரியாது. நூல்களின் அடிப்படையில் நீதிமன்றம் முடிவுக்கு வர முடியாது. ஆகம விதிகள் என்ன? ஏதேனும் குறிப்புகள் உள்ளதா? எதை பின்பற்ற வேண்டும்? என்பது குறித்து ஒரே நாளில் நீதிமன்றம் முடிவுக்கு வர இயலாது.

ஆகம விதிகள் விவகாரத்தில் ஒரே நாளில் உத்தரவு பிறப்பிக்க நீதிபதிகள் ஆகம விதி நிபுணர்கள் அல்ல. ஆகம விதிகள் குறித்து முறையான ஆவணங்களை தாக்கல் செய்யுங்கள். அதனை ஆய்வு செய்து அடுத்த வருடம் உரிய உத்தரவு பிறப்பிக்கப்படும்" என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

# தமிழ்நாட்டில் இன்றும் 108 டிகிரி பாரன்ஹீட் வெயில் கொளுத்தும்
## சென்னை வானிலை மையம் தகவல்

**சென்னை, ஏப். 19-**

தமிழகத்தில் இன்று 108 டிகிரி பாரன்ஹீட் வெயில் கொளுத்தும்' என சென்னை வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கோடை வெயில் தற்போது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் கடும் பாதிப்படைந்து வருகின்றனர். பொதுமக்கள் வெயிலின் தாக்கத்தை குறைப்பதற்காக சாலை ஓரத்தில் உள்ள கடைகளில் பழச்சாறுகள், தர்பூசணி பழ வகைகள், கரும்பு சாறு, இளநீர் போன்றவற்றை பருகி இளப்பாறி வருகின்றனர்.

சாலையில் நடந்து செல்லும் இளைஞர்கள், பெரியவர்கள் குடைப்பிடித்த படியும், பெண்கள் தலையில் ஷால் மற்றும் புடவைகளை போர்த்திய படி செல்கின்றனர். வருங்காலங்களில் வெயிலின் தாக்கம் கடுமையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுமக்கள் காரணம் இன்றி வெளியில் செல்லாமல் இருக்க வேண்டும் என தமிழக அரசு தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வருகிறது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் நேற்று அதிகபட்சமாக வேலூரில் 107 டிகிரி வெயில் சுட்டெரித்தது. மேலும், திருச்சி, திருப்பத்தூர், தஞ்சாவூர், சேலம், பாளையங்கோட்டை, நாமக்கல், மதுரை விமான நிலையம், மதுரை நகரம், கரூர், ஈரோடு, தருமபுரி, சென்னை ஆகிய பகுதிகளிலும் வெப்பம் 100 டிகிரி செல்சியசை தாண்டி வெப்பம் பதிவானது.

இந்நிலையில் தமிழகத்தில் இன்று 108 டிகிரி பாரன்ஹீட் வெயில் கொளுத்தும்' என சென்னை வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வட தமிழகத்தின் உள் மாவட்டங்களில் 42 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகும். தமிழகத்தின் உள்மாவட்டங்களில் சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. தமிழகத்தில் இன்று (ஏப்ரல் 19) 108 டிகிரி பாரன்ஹீட் வெயில் கொளுத்தும். தமிழகத்தில் வெப்பத்தின் தாக்கம் மேலும் அதிகரிக்கும். வெப்ப அலை வீசும். சென்னையில் 2 நாட்களுக்கு 100 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவாகும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற தேர்தல் எதிரொலி:
# ரயில், பேருந்து நிலையங்களில் அலை மோதிய மக்கள் கூட்டம்

**சென்னை, ஏப். 19-**

பாராளுமன்ற தேர்தல் காரணமாக நேற்று ரெயில், பஸ் நிலையங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதியது.

பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று (19-ந் தேதி) தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக நடக்கிறது. இந்த தேர்தலில் 100 சதவீத வாக்குகள் பதிவாக வேண்டும் என்பதற்காக மாவட்ட தேர்தல் அதிகாரிகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், பாராளுமன்ற தேர்தலில் வாக்களிப்பதற்காக சென்னையில் வசிக்கும் தென் மாவட்டங்களை சேர்ந்த பொதுமக்கள், தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல துவங்கி உள்ளனர். அந்தவகையில், தாம்பரம் ரெயில் நிலையம், பேருந்து நிலைய பகுதிகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. குமரிக்கு புறப்பட்ட சிறப்பு ரெயிலில் பயணிகள் முண்டியடித்துக் கொண்டு ஏறினர். பல்லவன் எக்ஸ்பிரஸ் ரெயிலின் முன் பதிவுப் பெட்டியில் மக்கள் கூட்டம் அலை மோதியது. தென் மாவட்டங்களுக்கு செல்லும் அனைத்து ரெயில்களிலும் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது.

வாக்களிக்க செல்வோர் வசதிக்காக நேற்று இரவு 9.50 மணிக்கு சென்னை தாம்பரத்தில் இருந்து திருநெல்வேலிக்கு சிறப்பு ரெயில் இயக்கப்படும் என தெற்கு ரெயில்வே அறிவித்திருந்தது. நேற்று இரவு 9.50 மணிக்கு புறப்பட்டு இன்று காலை 11.15க்கு திருநெல்வேலி செல்கிறது. மறுமார்கமாக இன்று இரவு 7 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 8.45 மணிக்கு தாம்பரம் வந்து சேர்கிறது.

## இஸ்ரேல் சரக்கு கப்பலில் சிக்கிய
# 17 இந்தியர்களில் கேரள பெண் மீட்பு

**புதுடில்லி, ஏப். 19-**



ஈரானால் கைப்பற்றப்பட்ட, இஸ்ரேல் சரக்கு கப்பலில் இருந்த இந்திய பணியாளர்கள், 17 பேரில் கேரளாவை சேர்ந்த டெஸ்லா ஜோசப் என்ற பெண் நேற்று (ஏப்ரல் 18) விடுவிக்கப்பட்டார். இவர் பத்திரமாக நாடு திரும்பினார். அவரது குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர்.

இஸ்ரேல் ராணுவத்தினருக்கும் காசா பகுதியில் உள்ள ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கும் இடையே சண்டை நடந்து வருகிறது. சமீபத்தில், சிரியாவில் உள்ள ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், வளைகுடா பகுதியில் சென்ற, இஸ்ரேலுக்கு சொந்தமான 'எம்.சி.எஸ்.ஏரிஸ்' என்ற சரக்கு கப்பலை, ஈரான் படை சிறை பிடித்தது.

இந்த கப்பலில் இருப்பவர்களில், 17 பேர் இந்தியர்கள் என கண்டுப்பிடிக்கப்பட்டது. சரக்கு கப்பலில் உள்ள 17 இந்தியர்களை மீட்கும் பணி நடைபெற்று வந்தது. இந்நிலையில், கப்பலில் இருந்த இந்திய பணியாளர்கள், 17 பேரில் டெஸ்லா ஜோசப் என்ற பெண் நேற்று (ஏப்ரல் 18) விடுவிக்கப்பட்டார். இவர் கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்தவர். இவர் நேற்று பத்திரமாக நாடு திரும்பினார். அவரது குடும்பத்தினர் மகிழ்ச்சி அடைந்தனர். கப்பலில் மீதமுள்ள 16 இந்திய பணியாளர்களுடன் நாங்கள் தொடர்பில் இருக்கிறோம். அவர்கள் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களை விரைவில் மீட்போம்'' என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

### தமிழகத்தில் பா.ஜ.க.வை வலுப்படுத்த முக்கிய பங்கு:

# பிரதமர் நரேந்திர மோடி அண்ணாமலைக்கு பாராட்டு

புதுடெல்லி, ஏப். 19-

தமிழகத்தில் பா.ஜ.க.வை வலுப்படுத்த முக்கிய பங்காற்றியதாக அண்ணாமலைக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் வரும் 19-ம் தேதி (இன்று) தொடங்கி ஜூன் 1-ந் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. முதற்கட்டமாக தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட 21 மாநிலங்களில் உள்ள 102 தொகுதிகளுக்கு இன்று வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இந்த நிலையில் தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க. வேட்பாளர்களுக்கு பிரதமர் மோடி கடிதம் எழுதியுள்ளார். அந்த வகையில் தமிழக பா.ஜ.க. தலைவரும், கோவை தொகுதி பா.ஜ.க. வேட்பாளருமான அண்ணாமலைக்கு பிரதமர் மோடி எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது;-

"எனது சக காரியகர்த்தா அண்ணாமலைக்கு ராம நவமி திருநாளில் கடிதம் எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் நலமுடன் இருப்பதாக நம்புகிறேன். ஒரு மதிப்புமிக்க வேலையை விட்டுவிட்டு மக்களுக்கு நேரடியாக சேவை செய்வதற்கு வந்துள்ள உங்கள் முடிவை நான் வாழ்த்துகிறேன். தமிழகம் முழுவதும் பா.ஜ.க.வின் அடிமட்ட இருப்பை வலுப்படுத்தவும், சட்ட அமலாக்கம், நிர்வாகம் மற்றும் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் உள்ளிட்ட முக்கியமான பிரச்சினைகளை முன்னிறுத்துவதிலும் நீங்கள் உண்மையிலேயே முக்கிய பங்காற்றியுள்ளீர்கள்.

உங்களது உறுதியான தலைமையால் கோவைக்கு மகத்தான பலன் கிடைக்கும். மக்களின் ஆசீர்வாதத்துடன் நீங்கள் பாராளுமன்றத்தை அடைவீர்கள் என்று நான் நம்புகிறேன். உங்களைப் போன்ற குழு உறுப்பினர்கள் எனக்கு பெரும் சொத்து. நாம் ஒரே அணியாக, தொகுதி மக்களின் நலனுக்காகவும், நாட்டின் நலனுக்காகவும் பாடுபடுவோம்.

இந்தக் கடிதத்தின் மூலம் உங்கள் தொகுதி மக்களுக்கு இது சாதாரண தேர்தல் அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் உள்ள குடும்பங்கள், குறிப்பாக மூத்த குடிமக்கள், காங்கிரஸ் ஆட்சியில் தாங்கள் அனுபவித்த சிரமங்களை நினைவில் கொள்வார்கள். கடந்த 10 ஆண்டுகளில், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரின் வாழ்க்கைத் தரமும் மேம்பட்டுள்ளது. பல பிரச்சினைகள் நீக்கப்பட்டுள்ளன.

இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. அனைவருக்கும் சிறந்த வாழ்க்கையை உறுதி செய்வதற்கான எங்கள் பணியில் இந்தத் தேர்தல் முக்கியமானதாக இருக்கும். நமது நிகழ்காலத்தை ஒளிமயமான எதிர்காலத்துடன் இணைக்க இந்தத் தேர்தல் ஒரு வாய்ப்பு. தற்போது வெயிலின் தாக்கல் அதிகமாக இருக்கிறது என்பதை நான் அறிவேன். இருப்பினும் இந்த தேர்தல் நமது நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானது. எனவே, அதிகாலை நேரத்திலேயே மக்கள் தங்கள் வாக்குகளை செலுத்திவிட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். நாட்டு மக்களின் நலனுக்காகவே எனது நேரம் அனைத்தையும் செலவிடுகிறேன். தேர்தலில் வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு தனது கடிதத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.





உலகப்புகழ்பெற்ற மதுரை சித்திரை திருவிழாவின் 7-ம் நாளான நேற்று சுவாமியும், அம்பாளும் நந்திகேசுவரர் மற்றும் யாளி வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

### போதமலை மலைக் கிராமத்திற்கு

# தலைச்சுமையாக கொண்டு செல்லப்பட்ட இ.வி.எம்.

ராசிபுரம், ஏப். 19-

ராசிபுரம் அருகே போதமலை மலைக் கிராம வாக்குச் சாவடிகளுக்கு மின்னணு வாக்கு இயந்திரங்கள் மற்றும் தேர்தல் பொருட்களை சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் அதிகாரிகள் சுமந்து சென்றனர்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் தாலுகா வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்தது போதமலை. தரை மட்டத்தில் ருந்து 7 கிலோமீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு கீழூர், மேலூர், கெடமலை என மூன்று கிராமங்கள் உள்ளன. இங்கு 1500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இருந்து சாலை போக்குவரத்து வசதி இல்லை. கரடு முரடான பாதைகளில் தான் பொதுமக்கள் சென்று வந்தனர்.

தற்போது ரூ.140 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி நடந்து வருகிறது. ஒவ்வொரு தேர்தலின் போதும் வாக்குப்பதிவு எந்திரங்களை தலைச் சுமையாக தான் கொண்டு செல்வது வழக்கம். தற்போது நாளை நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக கீழூரில் ஒரு வாக்குச்சாவடியும், கெடமலையில் ஒரு வாக்குச் சாவடியும் அமைக்கப்பட்டுள்ளது.

கீழூர் வாக்குச்சாவடியில் 428 ஆண் வாக்காளர்களும் 417 பெண் வாக்காளர்களும் வாக்களிக்க உள்ளனர். அதே போல் கெடமலையில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில் 159 ஆண்களும் 138 பெண்களும் வாக்களிக்க உள்ளனர். நாளை நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலில் இரண்டு வாக்குச்சாவடி மையங்களிலும் மொத்தம் 1142 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

நேற்று காலை மேற்கண்ட 2 வாக்குச் சாவடி மையங்களுக்கும் வாக்குப்பதிவு எந்திரங்களை ராசிபுரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து ராசிபுரம் தேர்தல் அதிகாரி முத்துராமலிங்கம், வட்டாட்சியர் சரவணன், தேர்தல் பிரிவு அதிகாரிகள் போலீஸ் பாதுகாப்புடன் அனுப்பி வைத்தனர்.

கீழூர் வாக்குச்சாவடி மையத்திற்கு நேற்று காலை 7.30 மணியளவில் வடுகம் அருகே உள்ள மலை அடிவாரத்தில் இருந்து 3 வாக்குப்பதிவு எந்திரங்கள், விவி பேட் எந்திரம், கண்ட்ரோல் யூனிட் உள்பட 5 எந்திரங்களை மண்டல அலுவலர் விஜயகுமார், உதவி மண்டல அலுவலர் ஜெயக்குமார் வாக்குச்சாவடி மைய அதிகாரி ராஜாமணி உள்பட 4 தேர்தல் அலுவலர்கள், சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர் செந்தில்குமார், ஏட்டு ரமேஷ், ஊராட்சி செயலாளர் பரமசிவன் உள்பட 10 பேர் வாக்குப்பதிவு எந்திரங்களை நடந்தே தலை சுமையாக பொதுமக்கள் உதவியுடன் மலைப்பகுதிக்கு கொண்டு சென்றனர்.

அதேபோல், கெடமலை வாக்குச்சாவடி மையத்திற்கு புதுப்பட்டி மலை அடிவாரத்திலிருந்து 3 வாக்குப்பதிவு எந்திரங்கள் உள்பட 5 எந்திரங்களும் நடந்தே கொண்டு செல்லப்பட்டன. மண்டல அலுவலர் பழனிச்சாமி, உதவி மண்டல அலுவலர் சுரேஷ், வாக்குச்சாவடி மைய அதிகாரி பிரபாகரன் மற்றும் போலீசார் உள்பட 10 பேர் சென்றனர்.



மதுரை சித்திரை திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கும் இடம் உள்ளிட்ட பகுதிகளை மாவட்ட கலெக்டர் சங்கீதா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாநகர காவல் ஆணையர் லோகநாதன், மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர்.

# தமிழகத்தில் 19 ஆயிரம் துணை ராணுவப் படையினர் குவிப்பு

சென்னை, ஏப். 19-

பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழகத்தில் முழுவதும் இன்று 19 ஆயிரம் துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளனர்.

நாடு முழுவதும் 18-வது பாராளுமன்ற தேர்தல் இன்று (ஏப்ரல் 19) தொடங்கி வரும் ஜூன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெறுகிறது. தமிழகம்-புதுச்சேரியில் உள்ள 40 பாராளுமன்ற தொகுதிகளிலும் முதல் கட்டத்திலேயே தேர்தல் நடக்கிறது. இந்த 40 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெறுகிறது. இதையொட்டி, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் வாக்குச்சாவடிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அத்துடன், வாக்குப்பதிவு எந்திரங்களை அனுப்பிவைக்கும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், பாராளுமன்ற தேர்தலையொட்டி, தமிழகத்தில் இன்று 19 ஆயிரம் துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடவுள்ளனர். இதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்து துணை ராணுவப் படையினர் தமிழகம் வந்துள்ளனர். சென்னையில் 2 ஆயிரம் துணை ராணுவ படை வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளனர். மேலும், வாக்குப்பதிவு முடிந்தவுடன், வாக்குப் பெட்டிகள் வைக்கப்படும் மையங்களிலும் 1,500 துணை ராணுவப் படையினர் பணியில் ஈடுபட உள்ளனர். தேர்தல் அமைதியான முறையில் நடைபெறுவதற்காகவும், அசம்பாவிதங்களை தடுப்பதற்காகவும் துணை ராணுவ படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

### பாராளுமன்ற தேர்தல்: தமிழகத்தில்

# வாக்குப்பதிவு எந்திரங்கள் அனுப்பும் பணிகள் தீவிரம்

சென்னை, ஏப். 19-

தமிழ்நாட்டில் பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் இன்று நடைபெறவுள்ள நிலையில், வாக்குச் சாவடிகளுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லும் பணிகள் தீவிரமாக நடைபெற்றன.

நாடு முழுவதும் இன்று தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. 7 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ள நிலையில் முதல் கட்டமாக தமிழ்நாட்டில் இன்று (ஏப்.19) நடைபெறவுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 39 தொகுதிகளுக்கு 68,000 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச் சாவடிகளிலும் நாளை காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

இந்த நிலையில், அந்தந்த தொகுதிகளுக்கு நேற்று காலை முதல் வாக்குப் பதிவு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த இயந்திரங்கள் அந்தந்த தொகுதிக்குட்பட்ட தேர்தல் அலுவலர்கள் முன்னிலையில் அனுப்பி வைக்கப்பட்டன. பதற்றமான வாக்குச் சாவடியாக அறிவிக்கப்பட்ட இடங்களுக்கு துப்பாக்கி ஏந்திய கூடுதல் பாதுகாப்பு படையினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

### வாக்களிக்க சென்னையில் இருந்து

# ஒரே நாளில் 1.48 லட்சம் பேர் சிறப்பு பேருந்துகளில் பயணம்

சென்னை, ஏப். 19-

பாராளுமன்ற தேர்தலையொட்டி சென்னையில் இருந்து நேற்று முன்தினம் ஒரே நாளில் 1,48,800 பேர் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்துள்ளதாக போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற மக்களவை தேர்தல் நாடு முழுவதும் இன்று 19-ம் தேதி தொடங்கி, ஜூன் 1-ம் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. வாக்குகள் ஜூன் 4-ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

தமிழகத்தில் மொத்தமுள்ள 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரியில் ஒரு தொகுதி என மொத்தம் 40 தொகுதிகளுக்கான தேர்தல் இன்று ஒரே கட்டத்தில் நடைபெற உள்ளது. இதனை தொடர்ந்து, அரசியல் கட்சிகள் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டன. நேற்று முன்தினம் மாலையுடன் கட்சிகளின் பிரச்சாரம் நிறைவடைந்தது.

இந்நிலையில், வாக்களிக்க இருக்கும் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல ஏதுவாக, 10,214 பேருந்துகள் இயக்கப்படும் என தமிழக அரசின் போக்குவரத்துத்துறை அறிவித்து இருந்தது. அதன்படி சென்னையில் இருந்து 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் 2,970 சிறப்பு பஸ்கள் என 2 நாட்களுக்கு மொத்தம் 7,154 பஸ்கள் இயக்கப்பட்டன. மேலும் பிற ஊர்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு 2 நாட்களுக்கு 3,060 பஸ்கள் இயக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வரும் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் பிற ஊர்களில் இருந்து சென்னைக்கு திரும்பும் வகையில் 1,825 சிறப்பு பஸ்கள் என 2 நாட்களுக்கு மொத்தம் 6,009 பஸ்கள் இயக்கப்படுகின்றன. அதே போல் வரும் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் பிற ஊர்களில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு திரும்ப 2,295 பஸ்கள் இயக்கப்படுகின்றன. மொத்தம் 10,214 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தினசரி இயக்கப்படும் 2,092 பஸ்கள், 807 சிறப்பு பஸ்கள் என மொத்தம் நேற்று முன்தினம் 2,899 பஸ்கள் இயக்கப்பட்டு உள்ளன என போக்குவரத்து துறை தெரிவித்து உள்ளது. இதில், 1,48,800 பேர் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்துள்ளனர். இதே போன்று, சென்னையில் இருந்து பயணம் செய்ய 46,503 பேர் நேற்று வரை முன்பதிவு செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ்நாட்டில் இன்று...(1-ம் பக்க தொடர்ச்சி)

ஜமுய், நவாடா, சத்தீஸ்கர் (1): பஸ்தர், ஜம்மு மற்றும் காஷ்மீர் (1): உதம்பூர், லட்சத்தீவு (1): லட்சத்தீவு, மத்தியப் பிரதேசம் (6): சிந்த்வாரா, பாலகாட், ஜபல்பூர், மண்டலா, சித்தி, ஷாஹ்டோல், மகாராஷ்டிரா (5): நாக்பூர், சந்திராபூர், பண்டாரா-கோண்டியா, கட்சிரோலி-சிமூர், ராம்டெக், மணிப்பூர் (2): உள் மணிப்பூர், வெளி மணிப்பூர், மேகாலயா (2): ஷில்லாங், துரா, மிசோரம் (1): மிசோரம், நாகாலாந்து (1): நாகாலாந்து, புதுச்சேரி (1): புதுச்சேரி, ராஜஸ்தான் (12): கங்காநகர், பிகானேர், சுரு, ஜுன்ஜுனு, சிகார், ஜெய்ப்பூர் கிராமம், ஜெய்ப்பூர், அல்வார், பரத்பூர், கரௌலி-தோல்பூர், தௌசா, நாகௌர் சிக்கிம் (1): சிக்கிம்.

### தமிழகத்தில்...

தமிழ்நாடு (39): திருவள்ளூர், சென்னை வடக்கு, சென்னை தெற்கு, சென்னை சென்ட்ரல், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், அரக்கோணம், வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, ஆரணி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், நீலகிரி, கோவை , பொள்ளாச்சி, திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கடலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், சிவகங்கை, மதுரை, தேனி, விருதுநகர், ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திரிபுரா (1): திரிபுரா மேற்கு, உத்தரகாண்ட் (5): தெஹ்ரி கர்வால், கர்வால், அல்மோரா, நைனிடால்-உதம்சிங் நகர், ஹரித்வார், உத்தரப்பிரதேசம் (8): பிலிபித், சஹாரன்பூர், கைரானா, முசாபர்நகர், பிஜ்னோர், நாகினா, மொராதாபாத், ராம்பூர், மேற்கு வங்காளம் (3): கூச்பெஹார், அலிபுர்துவார்ஸ், ஜல்பைகுரி, இந்த 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 102 தொகுதிகளில் இன்று தேர்தல் நடைபெறவுள்ளது.

### சட்டமன்ற தேர்தல்...

அத்துடன் அருணாச்சலப் பிரதேசம் மற்றும் சிக்கிம் மாநிலங்களில் சட்டமன்ற தேர்தலும் இன்று நடைபெறவுள்ளது. இந்த சட்டமன்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கையும் ஜூன் 4-ம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் விளவங்கோடு சட்டசபை தொகுதிக்கும் இன்று இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் வாக்குப்பதிவுக்கான...(1-ம் பக்க தொடர்ச்சி)

எண்ணிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து வாக்குச்சாவடிகளும் தயார் நிலையில் உள்ளது. முதியோர், மாற்றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்களுக்காக சாய்வு தளம் செய்து தரப்பட்டு உள்ளது. அவர்கள் வரிசையில் காத்திருக்க தேவை இல்லை. கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு இடைத்தேர்தலில் வாக்காளர்கள் ஓட்டு போடும்போது முதலில் சட்டசபைக்காக விரலில் மை வைக்கப்படும்.

அடுத்ததாக பாராளுமன்ற ஓட்டுக்காக இன்னொரு விரலில் மை வைக்கப்படும். இந்த தேர்தலில் அதிக வாக்குப்பதிவு நடைபெறுவதற்காக விழிப்புணர்வு பிரசாரம் நிறைய செய்து உள்ளோம். வாக்காளர்கள் அனைவரும் தங்களது கடமையை நிறைவேற்றும் வகையில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என சிந்தித்து வாக்களிக்க வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

காலை 7 மணி முதல் 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். மாலை 6 மணிக்கு மேல் வாக்களிக்க ஏதுவாக, டோக்கன் வழங்கி வாக்குப்பதிவு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது என்று தெரிவித்து உள்ளார். வாக்காளர் அடையாள அட்டை இல்லையென்றாலும் வாக்காளர்கள் தங்களுடைய ஆதார் கார்டு, பான் கார்டு உள்ளிட்ட 12 ஆவணங்களில் ஒன்றை கொண்டு சென்று வாக்களிக்கலாம். மாற்றுத்திறனாளிகள், முதியோர், கர்ப்பிணிகள் வாக்களிக்க ஏதுவாக வசதிகள் செய்யப்பட்டுள்ளது. 1950- என்ற எண்ணுக்கு அழைத்தால் வாக்களிக்க இலவசமாக வாகனம் அனுப்பி வைக்கப்படும்" இவ்வாறு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதாசாகு கூறினார்.